☞ மாதிரிக்காகப் பத்திரிகையைப் பெறுவோர் உடனே தங்கள் அபிப்பிராயம் தெரிவிக்கவேண்டுகிறோம்.

பிரஜாநுகூலன்.

அநுபவ விநோதங்களடங்கிய மாதப்பத்திரிகை.

வருஷ சந்தா ரூபா 2.] Copy Right. [வெளிநாடு ரூ. 2—8—0.

வருஷம் 14.	திரிச்சிராப்பள்ளி: மார்ச்சு மீ —1918.	மாதம் 4.

10 MAR 1918

பிரஜாநுகூலன் பத்திராசிரியரைப்பற்றி.

இப்பத்திரிகையைப் பதினான்கு வருஷ காலமாக நடத்திவருகிற பிரஜாநுகூலன் பத்திராசிரியர் தம் வாழ்வில் சென்ற ஜனவரிமாதம் 14-ம் தேதி இரவு ஒரு பெரும் பயங்கரம் பிராப்தமாகி, வாரத்தில் நேத்திரங்கள் தெரியாது போமெனத் தெய்வீக வாசகம் உண்டானது. அவ்விதமே ஜனவரிமாதம் 20-ம் தேதியாகிய வாரத்தின் கடைசி இரவு இருகண்களும் பார்வையற்றுப்போகப் பத்திராசிரியர் தத்தளித்துப்போயினர். இதனிலும் ஆபத்து வேறுயாதுளது? பிப்ரவரிமாதப் பத்திரிகை சம்பந்தமான எந்தக் காரியங்களையுமே செய்ய வகையற்றவராய்ச் செயலற்று நின்றார். பிப்பிரவரிமாதத்தில் பத்திரிகையை வெளியிடுவது எப்படியென்று பெரிதுங்கலங்கினர். ஆசார்ய தெரிசனம்செய்த மூன்றாம்நாள் நேத்திரங்களில் பிரகாஸம் உண்டாகுமென்று மற்றொரு தெய்வீக வாசகம் எழுந்தது. அதன்படியே ஆசார்ய தரிசனம்செய்த மூன்றாம்நாள் (5-பிப்பிரவரி-18.) கண்கள் வழக்கம்போல் தெரிந்தன. எல்லாம் தெய்வீகச் சார்பாய் இருப்பதில் ஒன்றுமே சொல்லத் தோன்றவில்லை. பத்திராசியரை உள்ளன்புடன் நேசிக்கும் சந்தாதார்கள் பிப்பிரவரி மாதத்தில் பத்திரிகையை வெளியிட முடியாமைக்காக அவரைப் பிரேமபூர்வகமாய் மன்னிப்பார்களாக. ஜனவரிமாதப் பத்திரிகையின் இலக்கம் மூன்று. மார்ச்சு மாதப் பத்திரிகையின் இலக்கம் நான்கு. ஆகவே மாதம் விட்டுப் போயிற்றேயன்றி, பத்திரிகையின் இலக்கமும் பத்திரிகையும் விட்டுப்போகாமல் தொடர்ச்சி சரியாகவே இருக்கிறதென்பதை நண்பர்கள் அறிந்துகொள்ள வேண்டும். இனி பத்திரிகை அந்தந்த மாதங்களில் முதல் வாரத்தில் தவறாது வெளிவந்துவிடும் என்பது நிச்சயம். நேயர்கள் தங்களின் பூர்ணமான அபிமானத்தைப் ''பிரஜாநுகூல''னிடத்துச் செலுத்தி ஆதரிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறோம். ஈசன் அருள்!

பிரஜானுகூலன்.

மனனமாலா.

தேசவாசனை, உலகவாசனை, சாஸ்திரவாசனை" என மூன்று வாசனைகளுண்டு. பூமியைப் பிரதக்ஷிணம செய்து பலஸ்தலங்களுக்கும் சென்று புண்ணிய காரியங்களைச் செய்வோமென்பது தேசவாசனை. உலகவாசனையானது தன்னை உலகத்தார் புகழவேண்டுமென்னும் விருப்பம் கொள்வது. சாஸ்திரவாசனை யென்பது பலவித சாஸ்திரங்களைப் படித்து அறிவோமென்பதாம்.

"படம்" எழுதுவோனுடைய எண்ணம் அதை விற்றுப் பணம் சம்பாதிப்பதிலேயே பதிந்திருக்கும். அவன் படத்தின் அழகைக்கண்டு ஆநந்தமடையான்! யாதொரு எண்ணமுமின்றி கடைவழியாய்ச் செல்பவன் அந்த அழகிய படத்தைக் கண்டு ஆநந்தமடைகிறான். இவன் மேற்படி படத்தை விற்கிறவனுமன்று; வாங்குகிறவனுமன்று. விற்றல், வாங்கல், பணம் பெறுதல், பணம் கொடுத்தல் என்ற கவலைகளின்றி படச்தின் அழகைப் பார்ப்பவனுக்கு ஆனந்தம் அதிகம்போல்—உலக சுகங்களில் விருப்பும் வெறுப்புமின்றி யிருப்பவனுக்கு ஆநந்தம் அதிகம்.

"கரைதப்பிய கப்பலும்—துறைதப்பிய தோணியும் போல்" தன் தொழில் தப்பிய மனிதன் துன்பமடைகிறான். இதை விவரித்தல் துயரப்பெருக்கே.

"கோட்டைக்குள்ளிருந்து" வெளியே யிருக்கும் சத்துருக்களோடு சண்டை செய்யும் வீரனே புத்திமான் அதுபோல் சம்சாரியாயிருந்து கடவுளை பூஜிக்கிறவனே அறிவாளி. குடும்பத்தைத் துறந்து சங்யாசியாகி பகவானை பூஜிப்பவன், சோட்டையைவிட்டு வெளியே வந்து எதிரிகளை எதிர்ப்பவனையொப்பாவன். கிருகஸ்தாசிரமி ஒருவேளை பாபம் செய்தாலும் பிராயச்சித்தத்தால் அந்தப் பாபத்தைப் போக்கடித்துக்கொள்ளலாம். பிராயச்சித்தமானது ஒரு கோட்டையைப் போல், அவனைப் பாபமாகிய எதிரியினின்றும் காப்பாற்றுகிறது. சங்யாசிகளுக்கு எவ்விதமான பிராயச்சித்தமும் இல்லை. நெருப்பாற்றில் போட்டிருக்கும் மயிர்ப்பாலத்தில் செல்லுகிறவனைப் போல் சங்யாசிகள் அதிஜாக்கிரதையோடு ஸ்வதர்மத்தைச் செய்யவேண்டும்.

"ஒரு மனிதனை" நீ யோக்கியனு வெனில், அவன் ஒன்றும் சொல்லாமல் மௌனமாக இருக்கவேண்டியது தான். என்? அவன் தன்னை அயோக்கியனென்று ஒருபோதும் சொல்லிக்கொள்ளான். யோக்கியனென்ருலோ கர்வி யென்று பிறர் நினைப்பர். ஆகவே அவன் செய்வது யாது? மௌனமாயிருப்பது தான்.

"முதலாவது நெப்போலியன்" உலக ஸ்வபாவத்தை நன்குணர்ந்தவர் ஒரு நாள் கோயில் கண்டாமணி சப்திப்பதைக்கேட்டு—மதமும், கௌரவப் பட்டங்களும் மனுஷ்யர்களை நன்ருய் அடக்கியாளும் முக்கிய கருவிகள் என்ருர்.

"அவஸரப்பட்டால் ஆகுமா?" என்று ஒரு கவி கூறுகிருர். இது எதற்காக வெனில், பலன் கிடைக்கவில்லையே யென்று ஆத்திரப்படவேண்டா மென்பதற்கே யாம்.

"பட்டினியாய்ப்" போட்டாலும், பாலும் அன்னமும் படைத்தாலும், பகவான் எப்போதும் நமக்கு நன்மையையே செய்துக்கொண்டிருக்கிருரென்றெண்ணிப் பொறுமையோடும் உத்ஸாகத்தோடும் இருப்பவர்க்கு ஒருநாளும் குறைவில்லை. பகவான் தரும் பொருள் அற்பமென்று நினைப்போர்க்கு உண்மையான சுகம் ஒருபோதும் உண்டாகாது.

தவனாகவும், அந்த வகையில் பிரேமநாதன் வசிக்கும் இடத்தை யும்; அவனது வாழ்க்கையின் விவரங்களையும் உணர்ந்திருந்தவனாக வும் கருதப்பட வேண்டியவனாகிறான். குறித்த ஒரு காலத்தில் பிரேமநாதன் ஊர் வந்து சேரக்கூடுமென்று அரசப்பன் கிரகித்தவ னாய், அது சம்பந்தமாகப் பிரேமநாதனுக்கும் அரசப்பனுக்கும்கூட கடிதப் போக்குவரத்துகளும் நடந்திருக்கலாம். அரசப்பன் தனக்கு வரும் கடிதங்களை அன்றன்று நெருப்பிலிட்டுப் பொசுக்கி விடுவது வழக்கமென்றும் தெரிகிறதில்—ஏதோ ஒரு மர்மம்—ரகசியம்—அரசப்பனிடம் அகப்பட்டுக்கொண்டு நிற்கின்றது. அந்த மர்மம் அவன் எதிர்பார்த்தபடி நிறைவேறாமல் பிரேமநாதன் கொலையால் தடையுண்டு போகவே, அதுவே காரணமாய் அவன் புத்தி தவறி சரியான பைத்தியத்தில் மூழ்கி விடுகிறான். இவ்வித ஸ்திதியில் சில கேள்விகள் தோன்றுகின்றன. பிரேமநாதன் இதுவரை எவ்விடத்தில் வாசமா யிருந்தான்? தான் வசித்த இடத்தில் அவன் செய்துகொண்டிருந்த வேலையென்ன? இது போன்ற பல வினாக்கள் உதிக்கின்றன.

அரசப்பனோ வெகு தீரன் போல் காண்கிறது. உலகத்தில் பலரைப்போல் தமது மனைவியினிடத்தில் எதுவொரு செய்திக ளையும் தெரிவித்து வைக்கும் தன்மை கொண்டவனல்லவென் றும், அனைத்தையும் தன் மனத்தினுள்ளேயே வைத்துக் காப்பவ னென்றும் தெரிகிறது. **பிரேமநாதன் கொலைக்குப் பிறகு அவ னுக்கு வரும் கடிதங்கள் திடீரென்று நின்றுவிட்டனவாம்.** இதுவும் ஒரு அதிசயமே. அரசப்பனைக் கேட்கலாமென்றாலோ, அவன் முற்றிலும் பித்தனைப்போற் கிடக்கின்றான். அவனுக்கு மாரி முத்து என்றொரு குமாரனுண்டாம். அவன் பிரேமநாதன் ஊருக்கு வருமுன்னதாகவே ஒரு நாட்போது காணமற்போயின னாம். அவனிடத்து அரசப்பனுக்கும் அளப்பரிய வாஞ்சையாம்—அத்தியந்த பிரேமையாம். அவனைத் திடீரென்று அரசப்பனெதி ரில் நிற்கவிட்டால் — அப்போது அரசப்பனின் சித்தம்—உள்ளம்—ஒன்றுபட்டு புத்திரவாஞ்சையால் அவனை ஆர்வத்துட

னும் தழுவிக்கொள்ளத் தூண்டுதல் தோன்றி, அந்த வகையில் அவனது மனோ நிலைமை ஒருவழிப்படுவதாகி-பைத்தியம் சற்றே தெளியவும்—தணியவும்—கூடும். அந்த மாரிமுத்துவை எவ்விதம் கண்டு பிடிப்பது? எந்த வகையிலுமே, கலக்கமும் சிக்கலுமானல் முடிவு பெறுவதுதான் எப்படி?—என்று இவ்வாருகத் தம்முள் ஸஞ்சீவபாபு சிந்தித்துக்கொண்டே, மணியக்காரத் தெருவிலுள்ள ஜெகநாத நாயுடுவின் வீட்டிற்குச் சென்று, அங்கு கனகவல்லியைச் சந்தித்தார். ஜெகநாத நாயுடு சிறைபட்ட பின்பு கனகவல்லி அவ்வீட்டில்தானே இருந்து வருகிருள்.

அந்த வீட்டில் அன்று விசேஷித்த ஆரவாரம்! அந்த வீட்டில் **ஸ்வாமி அறை** என்று ஒரு அறையிருந்தது. அந்த அறையினுள் ஒரு பெட்டி உயரத்தில் கட்டிவிடப்பட்டிருந்தது. அப்பெட்டியின்மீது புது சேலைகள் போடப்பட்டு, அதற்குத் தூப தீபங்களும் பூஜைகளும் விசேஷமாகச் செய்யப்பட்டன. எல்லோருக்கும் அன்று பலமான விருந்து! ஸஞ்சீவபாபுவுக்கு இவைகளெல்லாம் ஆச்சரியத்தை விளைவித்தன. கனகவல்லியை இன்று என்ன விசேஷம் என்று விசாரித்தார்.

கனகவல்லி:—"இன்று இந்த வீட்டிலிருக்கிற ஸ்வாமியின் புண்ணிய தினமாதலின் இவ்விசேஷாதிகள் நடக்கின்றன."

ஸஞ்சீவ:—"அந்த ஸ்வாமியின் வரலாறென்ன?"

கனகவல்லி:—"எனது பர்த்தா இந்தவீட்டை வாங்கு முன்னதாகவே இந்த வீட்டினுள் இந்த ஸ்வாமி யிருந்துவருகிறது. இவ்வீட்டை விற்பனை செய்தவர்களின் ஸ்வாமியாகும். இதை எனது பர்த்தா அப்புறப்படுத்த விரும்பியபோது பலரும் அதற்கு ஆக்ஷேபித்தனர். பூஜாரியைத் தருவித்து என் பர்த்தா கேட்க, அப்படி எடுக்கும்பக்ஷத்தில் அந்த ஸ்வாமிப் பெட்டியினுள்ளிருந்து ஸர்ப்பமொன்று வெளிவந்து கடித்துவிடுமென்பதாக அவன் கூறினான். அதுமுதல் அந்த யோசனை ஒழிந்தது. முந்தியவீட்டுக்காரரைப்போலவே வருஷமொருமுறை வரும் அந்த ஸ்வாமியின் புண்ணிய தினத்தன்று, பூஜை முதலியன நடத்தி இரண்டு புதிய

சேலைகளைவாங்கி அந்த ஸ்வாமிப் பெட்டியின்மேல் போட்டு மூடு வது வழக்கமாக இருந்துவருகிறது. இன்று அந்த விசேஷ தின மாகும்.”

ஸஞ்சீவ:—“இந்த வீட்டின் முந்திய சொந்தக்காரருக்கு ஸ்வாமி உண்டு; புண்ணியதினமுண்டு; எல்லாம் உண்டு—உன் வீட்டுக்காரருக்கு என்ன உண்டு? ஜெகநாதநாயுடுவுக்கு ஸ்வாமி எது? மண்ணேது? சேலைகள் வாங்கிப்போடுவதால் இது பெண் சாமியா? “ஸ்வாமியின் புண்ணிய தினம்”—என்றால் அதன் பொருள் என்ன? இந்த ஸ்வாமியைப்பற்றி முன் பின் ஏதேனும் கதைகள் ஏற்பட்டிருக்கின்றனவோ?”

கனகவல்லி:—“அது ஒரு பெரிய இராமாயணம். நூறு வருஷங்களுக்கு முன்பு சுண்ணும்புக்காரத்தெருவில் புல்லம்மா, செல்லம்மா என்று இரு பெண்கள் இருந்தனர். அவர்கள் ஒரு புருஷனுக்கு வாழ்க்கைப்பட்ட இரண்டு தாரமாவார். கணவன் இறந்துபோக, அவ்விருவரும் தங்களின் பர்த்தாவோடு உடன் கட்டையேற முயன்றனர். அவ்விதமே ஒரு பெரிய தீக்குண்டம் வளர்க்கப்பட்டு, அதில் இறந்த புருஷனின் சவம் வைக்கப்பட் டது. இவ்விருவரும் ஸ்நானம் செய்து மஞ்சள் குங்குமம் அணிந்து, அத்தீக்குழியை மூன்று முறை வலம்வந்து இறந்த கணவனுடன் நெருப்பில் குதித்து எரிந்துபோனார்கள். அப்படி எரிந்தவர்கள் கொடுத்துவிட்டுச்சென்ற அவர்களின் மாங்கல்யத்தையும் புஷ்ப தாம்பூலாதிகளையும் வெகு பக்தியோடும் இப்பெட்டியில் வைத் துப் பூட்டப்பட்டிருக்கின்றன. அவர்கள் உடன்கட்டை யேறிய தினத்தைப் புண்ணிய தினமாகக்கொண்டு பிரதிவருஷமும் அந்த நாளில் இப்பெட்டிக்கு விசேஷபூஜைகள் நடந்தேறுவதும், இரு சேலைகளைவாங்கி அப்பெட்டியின்மீது போடுவதும் சென்ற நூறு வருஷங்களாக நடந்துவருவதாய்ச் சொல்லப்படுகிறது. அப்பெட் டியை இதுகாறும் எவருமே திறந்து பார்த்ததில்லை. திறக்கக் கூடாதென்று ஏற்பாடாம். திறப்பின் ஸர்ப்பம் தோன்றுமாம்.”

ஸஞ்சீவபாபுவுக்கு இந்த விவரங்களெல்லாம் வெகு விநோதத்தைக் கொடுத்தன. புன்னகை நிரம்பினர். பரிதாபமும் கொண்டார். உடன்கட்டையேறும் அநியாய வழக்கம் எவ்வளவு ஆழமாயும் பக்தியாயும் இந்தியாவில் ஆசரிக்கப்பட்டு வந்திருக்கிறதென்பதையும், எவ்வளவு மூடபக்தி ஜனங்களிடம் குடிகொண்டிருக்கிறதென்பதையும் தம்முள் யோசித்தவராய் நின்றூர். அவரை நோக்கி,

கனகவல்லி :—"பூர்வகாலமுதல் நடைபெற்ற இவ்வுடன்கட்டை ஏற்பாட்டை யார் நிறுத்திவிட்டது?—ஏன் நிறுத்திவிட்டார்கள்?"

ஸஞ்சீவ ;—"இராஜாராம்மோஹன்ராய் முதலிய பெரியோர்கள் தோன்றி பிரிட்டிஷ் பார்லிமெண்டுவரை சென்று இதை ஆக்ஷேபிக்க, நம் காருண்ய பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் இந்த ஆசரணையை அடியோடகற்றினர். 1756—ம் வருஷத்திலிருந்து 1829—ம் வருஷம் வரைக்கும் இவ்வுடன்கட்டை ஏற்பாட்டால் எழுபதாயிரம் விதவைகள் நெருப்பிற் குதித்து மாண்டனரென்றல், அது எத்துணைக் கொடியதோர் செய்கை? இவ்வழக்கம் தடுக்கப்பட்டிராவிடில் இன்றைக்கும் எத்தனை விதவைகள் நெருப்பிலிட்டுப் பொசுக்கப்படுவார்கள்?"

கனகவல்லி:—"தங்களுக்கு விதவைகளிடத்தில் அதிக காருண்யம்போல் தோன்றுகிறது. **புருஷனிருந்தும் விதவைகள் போலவே** காலங்கழிக்க வேண்டியவர்களாயுள்ள என் போன்றோரின் துக்கம் எவரால் கணிக்க இயலும்? அதுபோக ஆடவனொருவன் இறந்துபோனல், அவனுக்காக அவனுக்கு வேண்டியவர்கள் பரிதபிக்கின்றனரே யன்றி, அவனேடு தனது வாழ்க்கை நயம், விருத்தி, ஓங்குகை, லக்ஷ்மீகரம் யாவும் அகன்று கைம்பெண்ணுகிக் கேவலப்படவேண்டிய பயங்கரமான விபத்துக்கு ஆளான அவனது மனைவியைப்பற்றி யார் வருந்துகிறூர்கள்? அவனது மனைவியின் பெற்றோர்கட்கு மட்டும் அத்துக்கம் ஊசலாடி நிற்குமேயன்றி கணவன் வீட்டாருக்கு அவன் போனதே பெரிய

துயரமாகத் தோன்றும். பிறகு இந்தப் பெண்ணைக் காலமுழுதும் வாட்டி வதைப்பர். இன்னும் சிறுபெண்ணாக இருந்து விடிலோ காலமுழுதுக்கும் சோதனைதான். விபசாரத்வ பட்டம்தான். பலர் வாயிலும் அவளைப்பற்றிப் பேச்சுதான். "அந்த அறிதலி வந்தாள், அவளால் என் அருமைமகனை இறக்கக்கொடுக்க நேர்ந்தது" என்ற ஏச்சு வார்த்தைகள்தான். இந்தத் துன்பங்களையெல்லாம் படுவதற்குப் பதிலாக ஒரு நாட்சஞ்சலமாய் உடன்கட்டை யேறி மாய்வது எவ்வளவோ சுலபமான ஏற்பாடுதான். அந்தக்காலத்திய பெண்மணிகள் எல்லாவற்றிலுமே பாக்கியசாலிகள்தான். நாங்கள்தான் நாகரீகம்—நாகரீகம் என்று சொல்லிக்கொண்டு நலங் குலைகிறோம்."

ஸஞ்சீவ:—"ஏது பெரிய பிரசங்கம் செய்துவிட்டாய்? ஒரு பத்திராதிபராகப் போகிறதுதானே!"

கனகவல்லி:—"என்னைப் பரிகசிக்கவேண்டாம். எந்தப் பத்திரிகைக்கும் பத்திராதிபராகப் போகவில்லை. அப்படி இன்னொரு பத்திரிகைக்குப் பத்திராதிபராகப் போய் பட்டவர்கள் பாடும் கேட்டிருக்கிறேன். உள்ள உண்மையையே நான் சொன்னது."

இவ்விதமான ஸம்பாஷணைகளாடிக் கொண்டு அன்று பகற்பொழுது முழுதும் அவ்வீட்டிலேயே இருந்தார். அவர் ஒவ்வொரு அறையையும் ஆராய்ந்துகொண்டு வந்தார். ஒரு அறை ஸதாகாலமும் பூட்டப்பட்டிருந்தது. பூட்டப் பட்டிருந்த அறையைத் தாம் பார்க்கலாமாவென்று ஸஞ்சீவபாபு கேட்க, கனகவல்லி நடுக்கத்துடனும், அந்த அறை வெறும்காலி அறையென்றும், உள்ளே ஒன்றுமில்லை யென்றும் கூறி மெதுவாக ஸஞ்சீவபாபுவை வேறு பேச்சுகளில் திருப்பினாள்.

அன்று மாலையில் அந்த ஸ்வாமியின் பெட்டியை ஸஞ்சீவபாபு தான் திறந்து பார்க்கவேண்டுமென்றார். அதற்குக் கனகவல்லி "குடி முழுகிப்போகும்—ஸர்ப்பம் தீண்டிவிடும்"—என்றாள். அதற்கு ஸஞ்சீவபாபு அரவம் வருமானால் தான் அதை வெட்டி

எறிவதாகக் கூறி, அப்பெட்டியை மேலே இருந்து கீழே இறக்கி வைத்து, பிறகு அப்பெட்டியின் பூட்டை ஒரு ஆணியால் திறந்தார். தான் அருகிலிருக்கப் பயந்து கனகவல்லி தூரப் போய் நின்றுகொண்டாள். அப்பெட்டியில் இரண்டு மாங்கல்யங்களும், சில பவுன்காசுகளும், இரண்டொரு பாக்குகளும் இருந்தன. அதற்குள் பல கடிதங்கள் இருக்கக் காணப்பட்டன. அக்கடிதங்களின் விலாஸங்களைப் பார்த்ததில், அவைகள் சென்ற இரண்டு வருஷங்களாக ஜெகநாதநாயுடுவுக்கு லண்டனிலிருந்து பிரேமநாதனால் எழுதப்பட்டவைகளாக இருந்தன. அக்கடிதங்களில் உள்ள விஷயங்களையெல்லாம் வாசித்துப் பார்த்து சஞ்சீவபாபு திகைத்துப் போனார்.

ஸஞ்சீவ:—“கனகவல்லி! பார்த்தாயா சங்கதிகள் எப்படிப் போகிறதென்று? ஜெகநாத நாயுடு ஸாமான்ய மனிதரல்ல. அவர் இந்த வீட்டை வாங்கியதும், இந்த ஸ்வாமியை அப்புறப்படுத்த முயன்றதாக நீ கூறிய யாவும் சரியாகவே இருக்கும். அவருடைய எண்ணமும் அப்போது அப்படித்தான் இருந்திருக்கலாம். அதனாலேயே அவருக்கு இந்த ஸ்வாமியிடத்து நம்பிக்கையோ மதிப்போ ஏதும் இல்லையென்பதைத் தெளிவா யுணரலாம். பிரேமநாதன் சிறு பருவத்திலேயே ஓடிவிட்டவனாதலின்,—அவனை ஜெகநாத நாயுடு அறியார். அதற்கு மேற்பட்டு எத்தனையோ வருஷங்கட்குப் பிறகு உனக்கும் ஜெகநாதனுக்கும் விவாகமாகிறது. எனவே, பிரேமநாதனும் இவரைத் தனது தமக்கையின் கணவன் என்று அறிய இடமில்லை. முதவில் ஸ்வாமிப் பெட்டியை அப்புறப்படுத்த முயன்றவர், பின் அப்பெட்டியை வீட்டினுள்ளேயே முன்போல் இருக்கவும், அதற்கு வருஷோற்சவம் நடக்கவும் ஏன் சம்மதித்தார் என்பது கேள்வி. வீட்டை வாங்கியதும் பெட்டியை ஜெகநாத நாயுடு திறந்து பார்க்கிறார். பிறகு அதை அப்புறப்படுத்தப் பிரயத்தனிக்கிறார். திடீரென்று அவர் நெஞ்சில் ஒரு யோசனை தட்டுப்படுகிறது. தனது அந்தரங்கமான கடிதங்களை இப்பெட்டியினுள் வைத்துப் பத்திரப்படுத்தி விட்டால்—அதை எவரும்

திறக்க அஞ்சுவா ராதலின்—அதனுள்ளிருப்பவை—எப்போதைக்குமே "வெளிக்குவாராத ரகசியமாக"வே இருக்குமென்று முடிவு கட்டுவதாகிறார். இதனிடையே இன்னொரு யோசனை யுதிக்கிறது. தன்னைப்போலவே பிறரும் துணிந்து திறக்க முயன்றால் என்செய்வது என்பதுதான். உடனே மந்திரக்காரனைத் தருவித்து, பணத்தால் தன் வழிப்படுத்திக்கொண்டு, அப்பெட்டியைத் திறப்போர் அரவு கடியுண்டு மாள்வாரென அவனைக்கொண்டு கூற வைத்து, மாய்மாலம் செய்கிறார். பேதை ஜனங்கள் நம்புவாராகின்றனர். அதன்பின் தானே அப்பெட்டிக்கு பூஜைகள் நடத்துபவாராகி அந்த ஸ்வாமியின் முதல் பக்தனாய் விடுகிறார். இஃதனைத்தும் நன்குபடித்த குள்ளநரியின் தந்திரங்கள். அப்பெட்டியினுள் இருந்ததெல்லாம் இந்த மாங்கல்யங்கள்தான். மற்ற தனைத்தும் பிரேமநாதனின் கடிதங்களே!"

கனகவல்லி:—"பிரேமநாதனுக்கு அவரைத் தெரியாதே?"

ஸஞ்சீவ:—"தெரியாதுதான். ஜெகநாதன் என்று பிரேமநாதனுக்கு யாரேனும் சிறுபருவத்தில் நேசனாக இருந்ததுண்டா?"

கனகவல்லி:—"ஆம்; இந்த வீட்டை எனது பர்த்தாவுக்கு ஒரு அம்மை விற்றுவிட்டார். அந்த அம்மையின் புருஷன் இவ்வீட்டை 400-ரூபாய்க்கு ஒரு செட்டியிடம் அடகு வைத்திருந்தார். அந்த 400-ரூபாயையும் எனது பர்த்தா கொடுத்துவிட்டு, இந்த வீட்டில் அந்த அம்மைக்கு ஒரு அறை எப்போதும் தருவதாக உபசாரம் கூறி தன் பேருக்குச் செய்துகொண்டார். பிறகு அந்த அம்மை வீட்டிலிருந்தால் பின்னுக்குப் பாத்தியதை ஏற்படுமென்று மெதுவாக அந்த அம்மையை வீட்டைவிட்டுக் கிளப்பி வேறிடத்துக்குக் குடிபோகச் செய்துவிட்டார். அப்போதுதான் அந்த அம்மைக்கு—தனக்கும் வீட்டுக்கும் **பாத்தியதை** யில்லையென்று கையெழுத்து வைத்து மோசம்போன விவரம் மனதில்பட்டது. நாலாயிரம் ரூபா பெறக்கூடிய இந்த வீட்டை எனது பர்த்தா மோசடியாய் 400-ரூபாய்க்குத் தன்வசம் செய்துகொண்டார். மோசம் என்றைக்காவது நாசந்தான்! அந்த அம்மைக்கு ஜெக

ஞதன் என்ெருரு குமாரனுண்டு. அவனும் பிரேமநாதனும் இணைபிரியாத பள்ளித் தோழர்கள். இப்போது அவன் இரங்கூ னில் இருக்கிருன். சீக்கிரம் வந்துசேர்வான்.''

ஸஞ்சீவ:—''உனது பர்த்தா எப்போதும் பக்கா பேர்வழி! பெரிய குள்ளநரி!! அந்த ஜகனுதனின் வீட்டுப்பெயரென்ன? அவன் தகப்பனுர் பெயரென்ன?''

கனகவல்லி:—''அவர்களின் வீட்டுப்பெயர் **சக்கரம்** என் பது. அவன் தந்தையின் நாமம் கோபன்ஞ நாயுடு''.

ஸஞ்சீவ :—''அவ்வாருயின் அந்த ஜெகநாதனின் பெயருக்கு முன் ''ச-கோ'' என்ற குறிப்பெழுத்து வரக்கூடுமே?''

கனகவல்லி:—''ஆம், அவன் பள்ளிக்கூடத்தில் ச. கோ. ஜக நாதன்—என்றே அழைக்கப்படுவதானுன்.

ஸஞ்சீவ:—''உனது பர்த்தாவின் கிரமமான பெயர் எப்படி?''

கனகவல்லி:—''க-கோ ஜெகநாத நாயுடு என்பதாகும்.''

ஸஞ்சீவ:—கனகவல்லி! இவ்வளவு போதும்! உனது தம்பி யான பிரேமநாதன் லண்டனிலிருந்து இப்பெட்டியிலுள்ள கடி தங்களை தன் தோழனை ச. கோ. ஜெகநாதனுக்கு எழுதியிருக் கிருன். அவனே ஊரிலில்லை. அவனுடைய வீட்டில் **க. கோ.** ஜெகநாதநாயுடுவான உனது பர்த்தா வாசமா யிருக்கிருர். ச. கோ. என்பது கை வேகத்தில் க. கோ. போலும் சிறிது தோன்றுகிறது. தபாலாபீஸார் உனது பர்த்தாவுக்கு அக்கடிதங் களைப் பட்டுவாடா செய்து விடுகின்றனர். அக்கடிதங்களால் பிரேமநாதன் உனது தம்பி என்று பூரணமாய் அறிந்துகொண்டு அவனிடம் பணம் பறிப்பதற்காக அவன் தோழனை ச. கோ. ஜெக நாதன் எழுதிய மாதிரியில் பதில் எழுதிவிடுகிருர். தான் எழுதிய கடிதங்களுக்கு நகலும் இப்பெட்டியில் பத்திரப்படுத்தியிருக்கிருர். கடிதப்போக்குகள் பலமாய் நடந்திருக்கிறது. ச. கோ. ஜெகநா தனே எழுதுவதாகப் பிரேமநாதன் நம்பிவிடுகிருன். பிரேம நாதன் தனக்கு நிலங்கள் வாங்கவேண்டுமென்றும், ஒரு பெரியவீடு வாங்கவேண்டுமென்றும் எழுதி, இருபதினுயிரம் ரூபாய் வரையில்

சிறுகச் சிறுக அனுப்பிவிட்டிருக்கிறன். கடைசி கடிதத்தில் தன் வேலைக்காரனேடு தான் புறப்பட்டுவருவதாகவும் எழுதியிருக்கிறன். சென்னை வந்து சேர்ந்ததாகத் தந்தியும் தந்திருக்கிறன். ரெயிலுக்கு வருமாறு கண்டுமிருக்கிறன். இப்படித் தந்தி கொடுத்தது எப்பிரல்மாதம் 15-ம் தேதியாகும். இதனல் என்ன ஏற்படுகிறதென்றல்—சமயபுரத்தில் கொலையுண்ட **காப்பிரி மனிதன்** பிரேமநாதனேடு வந்த வேலைக்காரனுக இருக்கவேண்டுமென்பதுதான். கேஸ் இப்போது நன்றுக ஓடுகிறது.''

கனகவல்லி:—''எனது பர்த்தாவின் கபட நாட்டியத்தை என்னென்பேன்? அந்த எப்பிரல் மாதம் 15-ம் தேதி இரவு எங்களை இராமேஸ்வரத்துக்கு ஸ்வாமி தரிசனர்த்தம் போய் வரும்படி கட்டாயப்படுத்தி அனுப்பினர். நாங்களும் அவலுடன் புறப்பட்டோம். நாங்கள் மதுரையில் தங்கிச்சென்று, எப்பிரல் மாதம் 17-ம் தேதி இராமேஸ்வரத்தில் இருக்கின்றேம். தந்தியின்படி என் தம்பி எப்பிரல்மாதம் 16-ம் தேதி காலையில் திரிச்சி ஜெங்கிஷனுக்கு வந்திருக்கவேண்டும். நாங்கள் அவனைக் காணுதிருக்கும்பொருட்டு இப்படி ராமேஸ்வரத்துக்கு என்னேடு என் தாயாரையும் சேர்த்துத் தந்திரமாய் அனுப்பிவிட்டிருக்கிறர்.''

ஸஞ்சீவ:—''பிரேமநாதன் அனுப்பிய பணத்தை எல்லாம் ஜெகநாதனுயுடு அவன் அபீஷ்டத்தின்படி நிலம் முதலியன வாங்காமலே சொந்தப் பிரயோஜனப் படுத்திக்கொண் டிருக்கவேண்டும். ஒப்புக்குமட்டும் சமயபுரத்திற்கருகே நிலங்கள் வாங்கியிருப்பதாகப் பிரேமநாதனுக்குக் கடிதங்கள் எழுதியிருக்கிறரென்று அவர் பதில் எழுதிய கடிதங்களின் பிரதியால் தெரிகிறது. ஆகவே பிரேமநாதன் தன்னைச் சந்திப்பதில் அவருக்கு இஷ்டமில்லை. மேலும், அவன் நண்பனுன ச. கோ. ஜெகநாதன் தானல்லவென்ற விஷயமும் வெளிப்பட்டுப்போம். போர்ஜரி கேஸாகவும் மாறும். ஆகவே ஜெகநாதநாயுடு ஏதோ சூதான காரியங்கள் செய்வதற்காக,—உங்களை இராமேஸ்வரயாத்திரை போகும்படி அனுப்பிவிட்டு, இப்போது வெளிவராதிருக்கும் சில ரகசியங்களை,—ரகசிய

ஏற்பாடுகளை,—அவர் தேடிவிட்டிருக்கவேண்டும். இந்த இடத்தில்தான் விஷயங்கள் அதிக இருட்டாகவும், சிக்கலாகவும் இருக்கின்றன. இந்த இருட்டை விலக்கி, வெளிச்சத்தை உண்டுபடுத்திக்கொண்டு உண்மையை அறியவேண்டும். ஆனால் எப்பிரல் மாதம் 16—ம் தேதி பிரேமநாதன் தந்தியின்படி ஜெகநாதனைச் சந்தித்துமட்டும் இருப்பானென்பது திண்ணம். அதே எப்ரல் மாதம் 18-ம் தேதியில் பிரேமநாதன் கொலை செய்யப்பட்டுப் போகிறான். காணாமற்போன பிரேமநாதனின் சவம் அகப்படாததும் ஒரு குழப்பமாயிருக்கிறது. முன்பே நான் ஒரு கேஸைக் கண்டுபிடிக்க முடியாமல் தோல்வி யடைந்துபோனேன். அந்தக் கேஸைப் போலப் பிரேமநாதன்கேஸிலும் நான் தோல்வியடைய நேருமோவென்ற கலக்கம் இடைக்கிடை வந்து என்னை வாட்டுகிறது.''

கனகவல்லி:—"அது என்ன கேஸ்? யாரைப் பற்றியது?"

ஸஞ்சீவ:—"கும்பகோணம் உப்புக்காரத்தெருவில் ஒரு தனவான் இருந்தார். அவரது விவாகபக்குமான **லக்ஷ்மீகாந்தம்** என்ற பெண்ணை பன்னீராயிரம்ரூபாய் நகைகளுடன் குலசேகரன் என்ற பைராகி யொருவன் மோசமாகக் கொண்டுபோய்விட்டான். இது பல வருடங்களுக்குமுன் நடந்த கேஸ். அவனாவது, அப்பெண்ணாவது, அந்த நகைகளாவது அகப்படவேயில்லை. அக்கேஸைக் கண்டுபிடிக்க ஏற்படுத்தப்பட்டவர்களில் நானும் ஒருவன். என் கஷ்டங்கள் வியர்த்தமேயாயின.''

ஸஞ்சீவபாபு மேற்கண்ட சங்கதிகளைக் கூறும்போது கனகவல்லிக்கு மனோநடுக்கமும் துக்கமும் திகிலும் ஏற்பட்டது. ஆயினும் அவற்றை வெளித்தோற்றுவித்துக் கொள்ளாமல் மறைத்து—சமாளித்துக்கொண்டு ஸஞ்சீவபாபுவை வேறு கவனத்தில் திருப்புவதற்காக,—அவரைப் பார்த்து—"பிரேமநாதனின் முதலாவது கடிதத்தையும், அதற்கு எனது பர்த்தா விடுத்த பதிலின் பிரதியையும் எடுங்கள் பார்க்கலாம்'' என்றாள். ஸஞ்சீவபாபு அக்கடிதங்களைப் படிப்பதானார்.

கடிதம்

லண்டன்

17. விக்டோரியா வீதி.

7—10—**

நேச மனோகர பூஷணமான என்னுயிர்த் துணைவன், அரிய நண்பன் ஆன ஜெகநாத சுகலோலன் செழித்தில்லறம் வளர்த்துச் செல்வ மக்கட்பேறு திவ்ய ஸத்கீர்த்தியைத் தாங்கி மேன்மே லோங்குக. மங்களம்.

இதுகாறும் உனக்குக் கடிதங்கள் எழுதாதிருந்தபோதிலும் உன்னை நான் மறந்துவிடவில்லை. அப்படி மறப்பதும் இந்த ஜென் மத்திலில்லை. உடன்பிறந்த ஸஞ்சீவிபோன்றவனே! உன்னோடு பழகி நின்ற அந்த சிறுபருவ விளையாடல்களை இன்றும் நினைத்து இறும்பூதுறுகின்றேன். நாம் இருவரும் சந்திக்கக் கடவுள் விரை வினில் ஆசி கூர்வார். நான் அங்கு வந்ததும் என் குடும்பத்திற்கே ஒரு புது ஸக்தி, ஒரு புது அழகு, ஒரு புது ஆரவாரம்—உண்டா கும். அதற்கேற்ற வண்ணம் புதிதாக நிலங்களும், ஒரு உன்னத மாளிகையும் எனக்கு நீ தேடி வாங்கி வைக்கவேண்டும். நானே உன்னவனாயிருக்கும்போது—அந்த இளமையில்தானே அடிமை சாசனம், அன்புசாசனம் ஏற்பட்டிருக்கும்போது—எனது காரியங் கள் யாவும் நினது சொந்தக் காரியாதிகள் போலவேதான். அதை நான் விவரிக்கவும் வேண்டுமோ? உலகில் நம்மைப்போல ஏகவசனமாக—பெரியவர்களான காலத்திலுங்கூடப் பேசிக் கொள்ளக்கூடிய நேசம்—பாசம் எல்லோருக்கும் கிடைத்துவிட லரிது. சிறுபோதில் என்னிடமிருந்த காசுக்கும் உன்னிடமிருந்த காசுக்கும் எப்படிக் கணக்கு ஏற்படாமல் இருவருக்கும் அது சொந்தமாக இருந்ததோ, அவ்விதமே இனியும் இருக்கும். நிலங் கள், நூதன மாளிகை இவ்விரண்டையும் இரகசியமாக நிறை வேற்று. உன் கடிதம் கிடைத்ததும் என் மணியாடர்களை நீ பெற லாம். எனது தாயாருக்கும், கனகம் அக்காவுக்கும், ரங்கபாஷியம்

மாமாவுக்கும், அத்தை ஜெனகலக்ஷ்மிக்கும், நம்மோடு விளையாடிக் கொண்டிருந்த நம்முடைய பிரியமான இராஜம்மாளுக்கும் என் க்ஷேமம் சொல்லக் கோருகிறேன். உனது குடும்பக்ஷேமங்களும் எழுதுக. என்றும் நின்னவனான

பிரேமநாதன்.

கனகவல்லி:—"என் அருமைத் தம்பியின் கடிதமா அது? அப்படியே லண்டனிலேயே இருந்து விட்டிருக்கலாகாதா? தனது பெண்ணை அவனுக்கென்று பூட்டுபோட்டு வைத்திருக்கும் ரங்கபாஷியம் மாமாவா அவனைக் கொல்வார்?"

ஸஞ்சீவ:—"உனது தம்பியின் கடிதத்திற்கு உனது பர்த்தா வரைந்துள்ள தந்திரமான பதிலைக் கேள். தன்னை அந்த **ச. கோ ஜெகநாதன்** போலவே காண்பித்துக்கொண்டு எவ்வளவு சாதுர்ய மாய் அக்கடிதத்தை முடித்திருக்கிறானென்று பார்."

***

பதில் கடிதம்

திருச்சி மணியக்காரத் தெரு.

25—10—**

அன்பிற்கணிகலமான என்னருமைப் பிரேமநாதனுக்கு உனது பள்ளித்தோழன், இணைபிரியா நண்பன், உன் ஞாபகமே மேலிட்ட ஜெகநாதன், பழய அபிமான ஆவலோடும் அன்போடும் எழுதிக்கொண்ட பிரியமான நிருபம். இறைவனது அருளால் நின் வீட்டினரும், தாயார், தமக்கை, தாய்மாமன், அத்தை, இராஜம், இன்னும் எனது பெற்றோர்களும்கூட அனைவருமே க்ஷேமம். இதுபோல் உனது க்ஷேமங்களுக்கு உனது கடிதத்தை யல்ல,—உன்னையே,—எதிர்பார்க்கிறேன். முதன் முதலாகக் கிடைத்த உன் நிருபம் நோக்கியதும், மறந்துபோன சென்றநாட் சிந்தனைக ளெல்லாம் ஒரு நிமிஷகாலத்திற்குளே உள்ளத்தே உதயமாயின. நான் பெரியவன், நீ சிறியவன், நான் அவிவேகி, நீ விவேகி, நீ ஐச்வரிய ஸம்பன்னன், நான் தரித்திரன் — என்பதாகிய அந்

தஸ்து பேதமான உலக மாய்கையினுள் நாம் பிரவேசியாமல், அனைவருமே ஒரு ஸம ஆசனத்தில் அமர்ந்து கல்வி கற்றுத் தோழமை பாராட்டி, ஸமானஸ்கந்தர்களாய் விளங்கிய—விசார மேதுமற்ற,—அந்த சிறு பிராயத்தில், நான் மனதார உள்ளம் கலந்து நேசித்தவர்களில் நீயே முதல்வனுவாய். அப்போது நாம் என்னென்ன விளையாடினேம், எப்படி எப்படி நின்றேம்? எந்தெந்த விதமான ஸந்தோஷங்களில் நமது நாட்களைப் போக்கினேம். அந்த சென்று போனகாலம் இனி வருவதேது? முன் போல் நாம் இருவரும் ஒரே இடத்தில் ஒரு ஸயனத்தில் ஒன்றாய் அன்பு கலந்து மகிழ்ந்துறங்க இனி முடியுமாவென மனது சோர்கின்றேன். சிறு பருவத்தில் அவ்வாறு ஒன்றாய் உறங்கிய நண்பர்கள் வயது காலம் வந்து விவாகம் கூடியதும், தமது நண்பனேடு ஸயனம் கொள்வதைவிட, தமது அருமைக் காதலியுடன் சயனிக்கவே அவர்களின் புத்தி போகின்றது. எவ்வளவோ ஆவலுடனும் நெடுநாட்களுக்குப் பின் தன்னைத் தேடிக் கண்டு புளகிதமெய்திய அரிய நண்பனுடன், அன்றிரவு சந்தோஷமாய்ப் பேசி அவனேடு ஒருமித்து உறங்க விரும்பாமல், அவனை வெளியில் தனியாக நித்திரைசெய்ய விட்டு, தான் தனது ஸயனக்கிருகத்திற்குச் சென்று விடுகின்றான். இங்கே தனியே கிடக்கும் நண்பன் இரவு முற்றும் உறங்காமல் மனது வாடியவனய்க் கிடக்கின்றான். பல பல நினைத்துச் சோர்கின்றான். ஏன் வந்தோமெனச் சிந்தை நோகின்றான். இது உலகின் போக்கு. இதைச் சிந்திக்கும்போது அந்தச் சிறு பிராயத்து ஒற்றுமையை மறுபடியும் பெற நினைத்து, அது சாத்தியப்படாததால் பெருமூச்சு விடவேண்டியவர்களாகிறேம். சிலருக்கு மனைவி வந்ததும் தமது பழைய நண்பனை மறந்துவிடுகின்றனர். சென்றுபோன அந்தக் காலத்தின் அருமை இப்போது தெரிவதுபோல், அப்போது தெரிந்திருந்தால் ஒரு நிமிஷநேரத்தைக்கூட நாம் வீணுக்கி விட்டிருப்போமா? என்னவோ உன்னுடன் ஸதாகாலமும் இருந்து வரவேண்டுமென்ற என்னுடைய நினைவு நிறைவேறுமற்போயிற்று. சென்றது செல்க.

துரிதத்தில் சந்தித்து பரவசப்படுத்துக. விரைவினில் உனக்கு ஒரு துணைவியும் வந்தெய்துக. உனது அன்பு கடிதம் காண அவா. அவசியம் எதிர்பார்ப்பேன். நெடுநாட் பிரிந்த காதலனைக் கண்ட காதலி போன்றும் மகிழ்வேன்.

உன் பழய நேசன்,

ச. கோ. ஜெகநாதன்.

குறிப்பு.—நான் பழய நேசன்; என்னைப்பற்றி அநேக வருஷங்கட்குப் பிறகு க்ஷேமம் விசாரிக்கிறாய். உனக்கு இப்போது அங்கே லண்டன்மா நகரில் எவ்வளவு புது சிநேகிதர்கள் கிடைத்திருக்கிறார்களோ? உனக்கென்ன குறைவு? ஆனால் பழய பாட்டியும், பழய தாதாவும், பழய மாமனும், பழய நண்பனும், பழய உறவும், பழய மனிதர்களும், பழய வீடும், பழய கோயிலும், பழய சட்டிபானையும். கிடைப்பது கஷ்டம்! நீ முதலில் மூவாயிரம் ரூபாய் அனுப்பு. அதைக்கொண்டு நிலங்கள், வீடு, இவைகட்கு ஏற்பாடு செய்யத் தொடங்குகிறேன். அவைகள் கைகூடியதும் உனக்குத் தெரிவிக்கிறேன். அதற்குப் பிறகு நீ சிறுகச் சிறுகப் பணம் அனுப்பலாம். என் மீதுள்ள நம்பிக்கை விஸ்வாசம் பிரேமை என்றும் வளர்வதாக.

ச. கோ. ஜெ.

***

ஸஞ்சீவ:—கனகவல்லி! கேட்டாயா கடிதத்தின் சங்கதிகளை? என்ன சாதுர்யம், எவ்வளவு மாதுர்யம், எத்துணைக் கற்கண்டுத் துண்டுகள்! பிரேமநாதன் முற்றிலும் மயங்கியே விட்டான். பணமும் தாராளமாக அனுப்பிக்கொண்டு வந்திருக்கிறான். இப்பெட்டி நிறைய அவனது கடிதங்களே இருக்கின்றன.

என்று கூறி அக்கடிதங்கள் அனைத்தையும் எடுத்துக்கொண்டு அப்பெட்டியை முன்பு இருந்த இடத்திலேயே கட்டிவிட்டு, அதைத் திறந்ததாக எவருக்கும் தெரியாதிருக்கும்படி கற்பித்து கனகவல்லியிடம் விடை பெற்று வெளியில் வர, அப்போது ஸ்ரீநிவாசப்பிள்ளையும் விஜயநாதனும் எதிர்ப்பட்டனர். அதை

நோக்கி ஸஞ்சீவபாபு பெருந் திகைப்புடன் இவர்கள் சுவரோரம் ஒற்றுக் கேட்டுக்கொண் டிருந்தனரோவென ஸம்சயித்தார். ஆயினும் அதைக் காட்டிக்கொள்ளாமல் அவர்களை நோக்கி,

ஸஞ்சீவ:—"என்ன விஜயநாதம், ஸ்ரீனிவாசபிள்ளை! எது இந்த வழி வந்தது? எல்லோரும் க்ஷேமந்தானே?"

விஜயநாதன்:—"தங்களுக்காகவே வந்தோம். தேடிப்போன தெய்வம் எதிரே வந்ததுபோல்தான். பள்ளத்தூரில் அடுத்த திங்களன்று எங்கள் குலதேவதைக்குப் பெரிய பூஜை போடப்போகிறோம். தாங்களும் வந்து சிறப்பிக்கவேண்டும்."

ஸஞ்சீவ:—"பள்ளத்தூர் எங்கிருக்கின்றது?"

ஸ்ரீனிவாசபிள்ளை:—அறந்தாங்கிக்கு ஸமீபத்தில் ஒரு கிராமம். தாங்கள் அவசியம் வரவேண்டும்."

ஸஞ்சீவ:—"விஜயநாதர் எனது வெகுகாலத்திய நண்பர். என்னை அவர் ஏமாற்றுவதும், நான் அவரை ஏமாறவைப்பதும் எங்களுக்குள் ஒரு விநோதமான விளையாடல்! இரங்கூனில் எவ்வளவோ உதவிகள் அவருக்குச் செய்துள்ளேன். தனது ருது சாந்திகாலத்தில் ஒரு யௌவனகுமாரி,—'சொல்லியபடி யெல்லாம் நடந்துகொள்,'—என்று தனக்கு மற்றப் பெண்களால் போதிக்கப்பட்டதை மனதிற்கொண்டு—அக்காந்தாமணி தன் பிராணகாந்தனிடத்து எவ்விதம் அவன் இஷ்டப்படியெல்லாம் நடந்துகொள்வாளோ, 'அவ்விதமே உங்களின் இஷ்டப்படி நானும் நடந்துகொள்ள எப்போதுந் தடையில்லை."

விஜயநாதன்:—"ஸ்ரீனிவாசப்பிள்ளையும் நானும் இந்த வாரம் ஞாயிறன்று புறப்படுகிறோம். எங்களுடனேயே தாங்களும் வந்தால் பரம திருப்தியாயிருக்கும்."

சஞ்சீவ:—"அப்படியே. உங்கள் பேச்சுக்கு இரண்டில்லை"

பிறகு சில நிமிஷங்கள்போல் பேசிக்கொண் டிருந்துவிட்டுப் பிரிந்தனர். ஸஞ்சீவபாபு அறந்தாங்கி போலீஸ் இனிஸ்பெக்டருக்குக் கடிதமொன்று எழுதினார். பள்ளத்தூரிலுள்ள ஸ்ரீநிவாசப்பிள்ளையின் வீட்டில் பரிசாரகர்களாகவும், காரியத்தின்மேல் கண்

ளுகவும் இருந்துகொள்ளுமாறு நான்கு போலீஸ் வீரர்களை மாறு வேடத்துடனும் அங்கு அனுப்பி வைக்கும்படியும், திங்களன்று இரவு 11-மணிக்கு ஸ்ரீநிவாஸப் பிள்ளையின் வீட்டினுள் பலவந்தமாய் உட்புகுந்து வந்து தன்னைச் சந்திக்கும்படியும் இன்னும் பலவும் அக்கடிதத்தில் கண்டிருந்தார். அறந்தாங்கி இன்ஸ்பெக்டர் உடனே பதில் எழுதிவிட்டார். அதில் ஸ்ரீநிவாஸப் பிள்ளை என்ற ஆசாமி பள்ளத்தூரில் சிவானந்தம் பிள்ளை என்ற பெயருடன் இருப்பதாகக் குறிப்பிட்டிருந்தார். தாம் செய்துள்ள ஏற்பாடுகளையும் விவரமாகக் கண்டிருந்தார்.

ஸஞ்சீவபாபுவை விஜயநாத-ஸ்ரீநிவாசர்கள் மிக்க உபசாரத்துடனும் பள்ளத்தூர் கொணர்ந்தனர். திங்களன்று குலதேவதைக்குப் பூஜை மிக்க ஆடம்பரமாயிருந்தது. இரவு ஒன்பது மணி யடித்ததும் விஜயநாதன், ஸ்ரீநிவாஸப்பிள்ளை, ஸஞ்சீவபாபு மூவரும் சொக்கட்டான் ஆட உட்கார்ந்தனர். விஜயநாதனுக்கு சிற்றின்பமான வார்த்தைகளில் வெகு பிரியம். அதற்கேற்றவாறெல்லாம் ஸஞ்சீவபாபு பேசினர். வரிசையாய் அடுக்கி வைத்திருந்த பிராந்தி புட்டிகள் அவ்விருவரின் வயிற்றினுள்ளும் தாராளமாய்ப் பிரவகித்துச் செல்லுமாறு ஊற்றி ஊற்றிக் கொடுத்தார். அருகிலிருந்த பரிசாரக போலீஸ் வீரன், ஸஞ்சீவபாபு ஏற்கெனவே திட்டப்படுத்தி யிருந்தபடி கிளாசைக் கழுவி வருவதுபோல் நடித்து, மயக்கத்தை அதிகப்படுத்தும் பொடியை அதனுள் தூவிக்கொண்டுவர ஸஞ்சீவபாபு பிராந்தியை அதில் ஊற்றித் தர, இருவரும் வெகு உற்சாகமாய்ப் பருகி வந்தனர். நிமிஷத்துக்கு நிமிஷம் மயக்கம் தலைக்கேற ஆரம்பிக்கவே இருவரும் தன் செயல் மறந்து உளர ஆரம்பித்துவிட்டனர்.

விஜயநாதன்.—"சிக்கிக்கொண்டானு ஸஞ்சீவபாபு! வங்காளிப்பயல்! வெட்டு, குத்து, கொளுத்து, கொல்லு, நசுக்கு. அவனொருவனுல் நம்மெல்லோருக்கும் ஸர்வநாசம்! அதி-ம-னோ-ரம்ய-மாய் பா-ரிஜா-த-மலரைத்-தந்-தது-யார்?"

ஸ்ரீநிவாசபிள்ளை.-"ஜெகநாதநாயுடு வீட்டில் அந்த ஸ்வாமிப் பெட்டியைச் சோதித்து இந்த ஸஞ்சீவன் என்னென்ன கூறினுன்—பார்த்தாயா? இவன் துப்பறிகிறவனும்! மூடன்! நாம் இருவரும் அந்த வீட்டின் சுவற்றோரம் நின்று உற்றுக் கேட்டதைத் துப்பறிய இவனுல் முடியவில்லை. இவன்தான் பிரேமநாதன் கொலைக் கேஸைக் கண்டுபிடிக்கப் போகிறுனுக்கும்!"

விஜயநாதன்.—"ஸ்ரீநிவாச! பேஷ்; இன்று என்னுடைய ஆக்ட் வெகு ஷோக்காக இருக்கும். வாடா—ராஜா--வாடா--ராஜா-வாடா, வந்தொரு முத்தம் தாடா!" ஸஞ்சீவன் தொலைந்தானு?"

ஸ்ரீநிவாச பிள்ளை.—" அந்த ஸஞ்சீவனை மடக்க அந்த சுவற்றோரத்திலேயே நல்ல தந்திரம் தீர்மானித்தாய் விஜயநாதா! பள்ளத்தூருக்கே பக்குவமாய்க் கொண்டுவந்து விட்டாயே! கட்டிலில் ஏறிய பின்பும் முறையா? இனி அவன் தப்புவது எது? நாலாவது அறையில் தான் முந்தியே குழிதோண்டியாயிற்றே! சீக்கிரம் அதில் புதைத்து மூடி வேலையைத் தீர்த்துவிட்டு, அதன் மேலே சுவர் ஒன்றையும் கட்டி விடலாம்."

விஜயநாதன்.-"தொலைந்தானடா ஸஞ்சீவன்! அவனை அந்த அறையினுள் புதைத்தாயிற்றப்பா. அதன் மேல் சுவரும் வைத்தாயிற்று. என் கண்கள் குளிர்ந்தன. முகம் மலர்ந்தது. நமது கஷ்டம் தொலைந்தது. ஏழரை நாட்டுச்சனியன் ஒரே இரவில் ஒழிந்தது, கண்மணியே, பெண்மணியே, காதலியே, ஜானகியே!

***

இந்த உளறுதல்களிலிருந்து ஸஞ்சீவபாபு தன்னை வகை மோசமாய்க் கொல்வதற்கே இங்கு இவ்விருவரும் அவ்வளவு பக்குவமாய் அழைத்து வந்தார்களென்பதை அறிந்துகொண்டு, தான் முன்னெச்சரிக்கையுடன் போலீஸாருக்கு அறிவித்துச் செய்த ஏற்பாடுகளைப்பற்றித் திருப்திகொண்டார். அதற்குள் விஜயநாத-ஸ்ரீனிவாசரின் முந்திய ஏற்பாடுகளின்படி எழெட்டு பேர் அங்கு வந்து ஸஞ்சீவபாபுவைக் கட்டைகளால் அடிக்க நெருங்கினர். அருகே யிருந்த பரிசாரக போலீஸ்வீரர்கள் நால்வரும் அவர்கள்

மேற் பாய்ந்து எதிர்க்கவே, அதேசமயம் ஸஞ்சீவபாபு பிகில்சப்தம் செய்ய, வெளியில் ஏற்கெனவே காத்துநின்ற போலீஸார் உட் புகுந்து அவர்களைக் கைது செய்யவும்—இவ்வளவும் ஒரு நிமிஷத் தில் நடந்துவிட்டது. ஒரு விநாடியின் விலை சில சமயங்களில் எத்தனை ஆயிரம் பவுன் விலை போகக்கூடியதா யிருக்கின்றது! ஸஞ்சீவபாபு தம்மைப் புதைக்கத் தயாரித்திருந்த குழியைத் தம் கண்ணாலேயே கண்டார். இரண்டு ஆள் ஆழமிருந்தது. அப்போ தே அதன்மீது சுவர் எடுக்கவும் ஏற்பாடாயிருந்தது. ஏற்கெனவே இருந்த சுவரை இடித்து அதன் கீழ் பள்ளம் தோண்டி யிருந்த னர். கைது செய்யப்பட்டவர்களுடனும், ஸஞ்சீவபாபு போலீஸ் சகிதமாய் அன்றிரவே அறந்தாங்கிக்குப் பிரயாணமானார்.

மறுதினம் அறந்தாங்கி போலீஸ் ஸ்டேஷனில் அடைக்கப் பட்டிருந்த-தம்மை விண்ணுலகேற்ற முயன்றவர்களை யெல்லாம்- பார்வையிட்டார். அதில் ஒருவனைக் கண்டு ஸம்சயித்து "உன் முகம் எனக்கு வேண்டியவரின் முகம் போலிருக்கிறதே; உனது தந்தையின் பெயர் யாது" என்று வினவினர். அதற்கு அவன் "என் தகப்பனரின்பெயர் அரசப்பபிள்ளை. நான் தெரியாமல் வந்து இங்கு அகப்பட்டுக்கொண்டேன். என் பெயர் மாரிமுத்து" என்று கூறிக்கொண்டு அழுதான். ஸஞ்சீவபாபு பெரு வியப்பு டன் அவனைத் தம்மிடம் அழைத்துக்கொண்டு, தான் அவனைக் காப்பாற்ற வந்திருப்பதாயும், அவன் தந்தை தனக்கு அதிக ஆப்த ரென்றும், தன்னுடன் அவனை அவசியம் அழைத்துக்கொண்டு திரிச்சிக்குச் செல்வதாயும் புகன்று தைரியப்படுத்தினர். பிறகு போலீஸ் ஸ்டேஷனில் மாரிமுத்து தனது வாக்குமூலத்தைப் பின் வருமாறு கூறினன்.

"நான் இருப்பது திரிச்சினப்பள்ளி. என் தகப்பனர் பெயர் அரசப்பபிள்ளை. எனக்கு சாணை பிடிக்கிற வேலையில் அதிக பரிச்சயம் உண்டு. ஸ்ரீநிவாச பிள்ளை யென்ற மறுபெயருடன் உலா வும் சிவானந்த பிள்ளை ஒரு ஸாதாரண மனிதர்போலத் திரிச்சியில் சுற்றிக்கொண்டிருந்தார். அவருக்கும் எனக்கும் நட்பாயிற்று. அவர்

என்னுடைய வீட்டிற்கு வரும் வழக்கமுண்டு. என்னுடைய வாழ் நாளில் எதாவதொரு நோக்கத்தை—லக்ஷ்யத்தை—நான் கொண்டிருக்கிறேனு என்று என்னை சிவானந்தம்கேட்டார். கண்ணியமாக ஸ்வதந்திரமாய் ஜீவனம் செய்து காலத்தைக் கழிப்பதே என்னுடைய நோக்கமென்றும், சொந்த மதத்தை யநுஸரித்து நடப்பதே எனது ஜீவியத்தின் முடிவென்றும் நான் நினைக்கிறேனென்பதாய்க் கூறினேன். நல்ல சகவாச மிருந்தால் என்னுடைய எண்ணம் நிறைவேறுவதற்கு அநுகூலமா யிருக்கு மென்றும் நான் சொன்னேன். ஒவ்வொரு நாளும் காவிரி ஆற்றங்கரையில் தன்னை வந்து பார்த்தால், நல்ல ஸகவாசம் உண்டு பண்ணிக்கொடுப்பதாக சிவானந்தம் இயம்பினர். மறுதினம் அவ்விதமே சந்தித்தோம். சாமர்த்தியமான களவுகளை வர்ணிக்கும் துப்பறியும் கதைகளை எனக்குக் கொடுத்தார். அவற்றை யெல்லாம் வாசித்து வந்தேன். அக்கதைகளில் குற்றவாளிகளாய்த் தோன்றுபவர்கள் ஸர்வ மூடர்களாதலின் சிக்கிக்கொண்டனரென்றும், அக்கதைகள் உண்மையாக நடந்த தாயில்லாமல், ஒரு தனி மனிதனுடைய சொந்தமான கற்பனைகளாதலின், குற்றம் செய்தோர் அகப்பட்டுக்கொண்டு விடும்படியாக அக்கதைகளை உருவகப்படுத்தி ஒழுங்கு பண்ணப்பட்டிருக்கிறதென்றும், உண்மைக் கதைகளாயின் குற்றவாளிகள் ஒருபோதும் அகப்பட்டிராரென்றும் நவின்றார். மற்றொரு தினத்துச் சம்பாஷணையில், உலகத்தில் மனிதர்களாகப் பிறந்தவர்கள் சுயேச்சையை இழக்காது இருக்க விரும்பினல் களவு தொழில்தான் சிலாக்கியமென்றார். எனக்கு இந்த யோசனைகள் பிடிக்கவில்லை. என்னுடைய ஸ்வபாவத்தை அவர் சட்டென்று கண்டு கொண்டதும் வேறு வழியில் திரும்பினர். எனக்கு மாதம் ஒன்றுக்கு நூறு ரூபாய் தருவதாயும், கற்களை சாணைபிடிக்கும் வேலையில் ஆறு மாதத்திற்குத் தன்னிடம் இருக்கும்படியும், வீட்டிற்குச்சொல்லாமல் புறப்பட்டு விடும்படியும் கூற, அதற்கு நானும் பண ஆசையால் இசைந்தேன். பள்ளத்தூரில் அவர் இல்லம் சேர்ந்ததும் எனக்கு மண்சட்டியிலேயே-என்னைப்போல் ஏமாந்த

வர்களோடு சேர்த்து—கஞ்சியும் கடித்துக்கொள்ள மிளகாயும் பரிமாரப்பட்டது. சில தினங்கள் கழித்து சிவானந்தம் என்னைப் பார்த்து நீ சுகமாயிருக்க விரும்புகிறீரே-அவ்வாருனல் நீ வேலைக்கு வரப் பிரியப்படுகிருயா—என்று என்னைக் கேட்டார். வேலை என்ருல் கொள்ளையிடுவ தென்று பொருள்படும். எனக்குத் துணிகாமும் உற்சாகமும் அதிகப்படுவதற்கு நான் இக்கொள்ளைகளில் சேர்ந்து வேலை செய்ய வேண்டியது அவசியம் என்று வற்புறுத்திஞர். இந்த சமயத்தில் சில மூடிப்புகள் என் முன்பு கொண்டுவந்து வைக்கப்பட, அவைகளில் கொள்ளையிடப்பட்ட பொன்னுபரணங்களும், வெள்ளி நகைகளும் இருந்தன. நான் என்னுடைய சம்மதத்தைப் பிறகு தெரிவிப்பதாகச் சொன்னேன். கொள்ளையில் அகப்பட்ட நகைகளை வெவ்வேருகப் பிரித்தெடுத்து உரு மாற்றுதற்காக, என்னைப் போல் சில கம்மாளர்களை ஏமாற்றி அங்கே கொண்டுவந்து வைக்கப்பட்டிருக்கின்றனர். கற்களின் உருவத்தை மாற்ற என்னைப்போன்ற சாணை பிடிப்பவர்கள் பலர் இருந்துகொண்டு வேலை செய்கிருர்கள். எனக்கும் இவர்களெல்லோருக்கும், அந்த வீட்டை விட்டகன்ருல் கொல்லப்பட்டுப் போவீர்களென்று எச்சரிக்கப்பட்டிருக்கின்றது.

ஐந்து மாதங்களுக்கு முன், அதாவது எப்பிரல் மாதத்தில் ஒரு பத்துபேர் கூட்டத்துடன் நானும் திருச்சிஞப்பள்ளிக்கு அனுப்பப்பட்டேன். அங்கு மணியக்காரத்தெருவில் ஜெகநாதநாயுடு வீட்டிற்கு எதிரில் உள்ள ஒரு தோட்டத்தில் நாங்கள் வைக்கப்பட்டிருந்தோம். இரண்டு சிறுவர்கள் ஓட்டமாய் ஓடிவர, அவர்களைத் தொடர்ந்து ஒருவர் வருவாரென்றும், அவரை அந்த இடத்தை விட்டுச் செல்லாதவாறு பார்த்துக்கொண்டு, அவ்விரு சிறுவர்களை மட்டும் வெளியே போகச் செய்துவிட்டு, தோட்டத்தின் கதவை மூடிக்கொள்ள வேண்டுமென்றும், பிறகு அவரைப் பலமாகக் கட்டைகளால் அடித்துக் கொன்றுபோடவேண்டுமென்றும், சிவானந்தம் எங்களுக்குக் கட்டளை பிறப்பித்தார். அவ்விதமே இரு சிறுவர்கள் ஓடிவர, அவர்களைத் தொடர்ந்து ஒருவர் ஓடிவர, அவர்

களை மெதுவாக அனுப்பிவிட்டு, அவரைக் கட்டைகளால் என்னு டன் வந்திருந்தவர்கள் அடிக்க ஆரம்பித்தனர். அவருடைய முகத் தில் எனக்குத் தெரிந்த யாருடைய ஜாடையோ தென்படுவதாக என் புத்திக்குப்பட்டது. ஒரு பத்து அடிகள் அவர் மீது விழவும் அவர் பிணமானூர். அன்றிரவே எங்களைப் பிரயாணப்படுத்திப் பள்ளத்தூருக்குக் கொண்டுபோயினர். அதுமுதல் இதுகாறும் பள்ளத்தூரிலேயே இருந்தேன். ஸஞ்சீவபாபுவைக் கட்டைகளால் இரவு 12-மணிக்கு அடித்துக்கொல்லும்படி ஏவப்பட்ட வண்ணம் வேறு விதியின்றி மற்றவர்களுடன் வந்தேன். மூன்று தினங் களுக்கு முன்பு புதிதாக வேலைக்காரர்களாய்ச் சேர்ந்துகொண்ட நால்வரும் ஒருங்கே எங்களை எதிர்த்தனர். மறுநிமிஷத்தில் மற்ற வர்களோடு நானும் கைதியானேன்'' என்று தனது வாக்கு மூலத்தைக் கொடுத்தான்.

ஸஞ்சீவபாபு அறந்தாங்கி போலீஸ் இனிஸ்பெக்டரிடம், மாரிமுத்துவை எந்த சமயத்திலும் ஆஜர்படுத்தத் தான் தயா ரென்றும், இந்த வாக்குமூலத்தை அந்தரங்கமாக வைத்துக்கொள் ளும்படியும், இப்போது சிவானந்தமென்கிற ஸ்ரீநிவாசபிள்ளையை யும் அவனைச் சேர்ந்தவர்களையும் கைது செய்துவிட்டால், அவர் கள் நடத்தியிருக்கிற அநேககாரியங்கள் வெளிவராமல் மறைந்து போமென்றும், அவர்களை இப்படியே விட்டுவைத்துக்கொண்டு போய், தான் சொல்லுகிற சமயத்தில் திடீரென்று அவர்களைச் சிறைப்படுத்தவேண்டுமென்றும், ஆனால் இப்போது மேற்பார்வை யாக அவர்கள் மீது ஒரு கண் வைத்து அவர்களின் காரியங்களை ஆராய்ந்து வரவேண்டுமென்றும் கூறி அதற்குச் சம்மதிக்கச்செய் தார். அதன் பின்னர் மாரிமுத்துவுடன் திரிச்சிசேர்ந்தார். மாரி முத்துவை திடீரென்று அரசப்பன் முன்னிலையில் நிற்கவைக்க, அப்படி எதிர்பாராத விதமாய்த் தனது குமாரனைச் சந்தித்த ஒரு பார்வையில், அரசப்பனின் மனம் ஒருநிலைப்பட்டு அவனைத் தழு விக்கொள்ள—அவன் சித்தமும் ஸ்வாதீனமடைந்து பைத்தியமும் சற்று தெளிவுபடுவதாயிற்று. அதைத் தொடர்ந்து சிகிச்சைகளும் செய்யப்பட்டுவரவே அரசப்பனும் ஒருநிதானமான நிலைக்கு வருவ தானூன். "ஸஞ்சீவபாபுவின் சூழ்ச்சி''யும் நிறைவேறிற்று. லண்டன் பிரயாணமும் உறுதிபெற்றது. அந்தப் பிரயாணத்திற் குத் தைரியம் தந்தவன் அரசப்பனேதான். அதன் விவரங்கள் கதாமுகத்தில் வெளிப்படும்.

பிரேமநாதன் முதல்பாகம் முற்றிற்று.

இரண்டாம் பாகம்

அத்தியாயம் 12

லக்ஷ்மீகாந்தமும் கிருஷ்ணமூர்த்தியும்

ஆநந்தபத்திரிகா ஆபீஸில் அன்றைய தினத்து வேலைகள் வெகு பரபரப்புடனும் நடந்துகொண்டிருந்தன. வேலைக்காரர்கள் அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருந்தார்கள். ஆபீஸ் கட்டிடம் மிக்க சோபிதம் பொருந்தியது. இந்தியச் சிற்பிகளால் கட்டப்பட்டது. வாசற்கால்களும் தூண்களும் கதவுகளும் பல சித்திர வேலைகள் அடங்கினவைகளா யிருந்தன. சுவர்களில் பலவித சித்திரப்படங்களைத் தொங்கவிடப்பட்டிருந்ததோடு புராணக்கதைகளை விவரிக்கும் சித்திரங்களும் வரையப்பட்டிருந்தன. கிருஷ்ண மூர்த்திப் பிரபு தான் "ஆநந்தா" வின் பத்திராதிபர் அவர் லண்டனுக்கு வந்து வாரமிருமுறையாக அதை ஸ்தாபித்து, பிறகு தினசரிப் பத்திரிகையாக இப்போதுள்ள பிரபலத்திற்கு அதைக் கொண்டு வந்தார். இங்கிலாந்தில் இந்தியர்களின் சார்புக்கு ஒரு பலமான பத்திரிகையாக ஆங்கிலத்தில் அது நடைபெற்று வந்தது.

மாலை நான்கு மணி யிருக்கும். அன்றைய "ஆநந்த பத்திரிகை" அவசரமாக வெளியாக வேண்டிய நேரம். மற்றப் பக்கங்களெல்லாம் அச்சிட்டுத் தீர்ந்துபோயின. "பத்திராதிபர் கலம்" அடங்கிய பக்கமும் அச்சிட்டு, பத்திராதிபரின் "கடைசிப் பாரி

வை"க்காக ஒரு பிரதி அவரது மேஜையின்மீது கொண்டுவந்து வைக்கப்பட்டது. அவர் அநுமதி தரவேண்டியதொன்றே பாக்கி! கிருஷ்ணமூர்த்திப்பிரபு வெகு துரிதமாக முழுவதும் கவனித்துக் கொண்டே போனார். அந்தப் பொறுப்பான பார்வை சாமான்யமானதல்ல. பிறகு பத்திரிகையில் யாதேனும் தகாத விஷயங்கள் இருந்துவிடின், அதனால் உண்டாகும் பிந்திய கஷ்டங்களுக்கெல்லாம் அவரே உத்திரவாதி. பத்திரிகை அவருக்குச் சொந்தமானதாக இருந்தாலும், ஆபீஸிலிருந்தும் வெளியாய்விட்ட பத்திரிகைகளிலுள்ள விஷயங்களை மூடிவைத்து விடுவதற்கு அவர் தரமல்லவே! எனவே வெகு சிரத்தையுடனும் ஒவ்வொன்றாகக் கவனித்துச் செல்லுகையில் சட்டென்று ஒரு விஷயம் அவர் கண்ணிற்பட்டது. "**லக்ஷ்மீகாந்தத்தின் விக்ஞாபனம்**" என்பதை ஆவலுடனும் வாசித்தார். பன்முறையும் தமது கண்களைத் துடைத்துக்கொண்டார். அதற்குள் மணி நாலரை ஆய்விட்டது. 'சரி' என்று தக்ஷணமே அதில் கையொப்பமிட்டு அநுமதி கொடுத்துவிட்டார். மறு நிமிஷத்தில் அன்றைய பத்திரிகை பிரசுரமாய்விட்டது.

உத்திரவுப்படி மானேஜர் எதிரில் நின்றார். "**லக்ஷ்மீகாந்தம்**" என்ற கடிதம் எங்கே யென்று கிருஷ்ணமூர்த்திப் பிரபு வினவினார். மானேஜர் அதை உபபத்திராதிபரிடம் அனுப்பிவிட்டதாகக் கூறினார். உடனே மணி சப்தம் உண்டானது. உபபத்திராதிபர் ஓடிவந்தார். லக்ஷ்மீகாந்தத்தின் கடிதம் கேட்கப்பட, மறுநிமிஷத்தில் துண்டுதுண்டுகளாகக் கிழிக்கப்பட்ட அக்கடிதம் ஆஜர் செய்யப்பட்டது. ஏன் இத்தனை துணுக்குகளாக்கப்பட்டனவென்று கிருஷ்ணமூர்த்திப் பிரபு சினக் குறிப்புடன் உசாவினார். அச்சுக் கோர்ப்போருக்கு சௌகரியமாக இருத்தற்கென்று அவ்வாறு துண்டுகளாக்கப்பட்டன வென்றார் உபபத்திராதிபர். ஆயினும் இத்தனைத் துணுக்குகளாகவா--இவ்வளவு சின்னபின்னமாகவா--சரி--போகலாம் என்றார் கிருஷ்ணமூர்த்தி. மறுபடியும் ஒரு

முறை அங்கிருபத்தைப் பத்திராதிபர் வாசித்து முடித்தார். "ஹா! நமது ஜென்ம பூமியைச் சேர்ந்த ஒரு பெண்மணி இத்தகைய இக்கட்டுகளிலா நிற்கின்றாள்"—என்று உள்ளம் உருகினர். பல் பல யோசனைக நிறைந்தவரானர்.

ஆபீஸ் மானேஜர் அதிக சாமர்த்தியசாலி! ஸதாகாலமும் சிடு சிடுவென்று எல்லோர் மீதும் எரிந்து விழுவார். அவ்விதம் இருந்தால்தான் வேலைகள் சரிவர நடக்குமென்பது அவரது கருத்து. ஆபீஸ் சிப்பந்திகள் அவருக்குப் பாஷாணத்தைக்கொடுத்துக் கொன்றுவிடக்கூட முயன்ற சந்தர்ப்பங்களும் உண்டு. கபடமே உருவெடுத்து வந்த கருணகரப் பிரபு ஆவார். "தேசாபிமானம்—என்பது காகிதத்தில் எழுதும்போது மட்டுந்தான்—பிறகு கிடையாது"—என்பது அவரது அபிப்பிராயம். ஒரு புது கிரந்த கர்த்தா தாம் அதிக சாமர்த்தியமாக இயற்றிய ஒரு நூலைப்பற்றி விளம்பரங்கள் அச்சிட்டு "ஆநந்தா" விற்குள் வைத்து அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். மானேஜர் இருபதினயிரம் பத்திரிகைகள் போகிறதென்றும், விளம்பரங்கள் பத்திரிகை ஆபீஸில்தானே அச்சிடவேண்டுமென்றும்,அதற்கு இவ்வளவு சார்ஜாகுமென்றும் தெரிவித்தார். அவ்விதமே கிரந்த கர்த்தா இருபதினயிரம் விளம்பரப் பத்திரிகைகளுக்குக் காகிதமும், அதற்கான அச்சுக்கூலியும், அதைப் பத்திரிகையில் வைத்தனுப்பச் சார்ஜும் செலுத்திவிட்டார். விளம்பரங்களும் அச்சாயின. ஆனல் பதினலாயிரமே! பாக்கி ஆறுயிரத்துக்கு காகிதம் கட்டுகூடப் பிரிக்கப்படாமல் அப்படியே இருந்தது. கிரந்த கர்த்தா ஆபீஸுக்குள் தாராளமாகப் போய்வந்து கொண்டிருந்தபடியால் இதை யறிந்து பாக்கிக் காகிதம் என் அச்சிடப்படவில்லை யென்றார். மனேஜருக்கு மூக்குக்கு மேல் கோபம் வந்துவிட்டது. ஆபீஸை விட்டு வெளியிற் செல்லும்படி கூறிவிட்டார். உடனே போகாவிட்டால் கழுத்தைப் பிடித்துத் தள்ளுவார்கள்போ லிருந்ததால் கிரந்த கர்த்தாவும் வெளியில் வந்துவிட்டார். அன்றைய மாலையில் பதி

ஞலாயிரம் பிரதிகள் பத்திரிகைக்குள் வைத்து அனுப்பியாய் விட்டன.

162423

அன்று பகலில் ஒரு வியாபாரி மானேஜரிடம் ஒரு கடிதத்தை நீட்டினர். அதில் அந்த வியாபாரிக்குச் சுலபமான சார்ஜில் சகாயம் செய்யும்படி பத்திராதிபர் குறிப்பிட்டு தமது கையொப்பமும் வைத்திருந்தார். அதை மானேஜர் லக்ஷ்யமே செய்யவில்லை. இவ்விதம் சிபாரிசு வாங்கி வரப்பட்டவர்கள் இரண்டு கொம்பு முளைத்தவர்களானதால், அவர்களுக்கு இரட்டிப்பான சார்ஜ் போடவேண்டுமென்பது மனேஜரின் அபிப்பிராயம். தமது சிடுசிடுப்பான வதனத்தைப் புன்சிரிப்புள்ள முகமாகத் தக்ஷணமே மாற்றிக்கொண்டார். மானேஜருக்கு இயற்கையிலேயே முன்னம் பற்கள் நான்கு உதட்டைத் தாண்டி வெளியில் வந்திருக்குமாதலின், புன்சிரிப்பு தோன்றச் செய்துகொள்வதற்கு அதிக சிரமம் வேண்டியதில்லை. வியாபாரி பத்திராதிபரிடமிருந்து வந்தவரானதால், அவரால் இவ்வளவு பிரதிகள் போகிறதென்ற விவரத்தை எற்கெனவே அறிந்து வைத்திருப்பவர். ஆகவே 14-ஆயிரம் விளம்பரப் பத்திரிகைகள் அடங்கிய காகிதக் கட்டை அவர் முன்புவைத்தார். மானேஜர் இருபதினுயிரம் பிரதிகளென்று அவரிடம் பேச முடியவில்லை. ஆயினுமென்ன ? கிரந்த கர்த்தாவிடம் வாங்கிய சார்ஜுக்கு இரட்டிப்பாகவே வியாபாரியிடம்,—நோட்டீஸ்களைப் பத்திரிகையில் வைத்தனுப்புவதற்காக,—வாங்கிவிட்டார். அவருக்காகவே,--அவரது சிபாரிசு கடிதத்திற்காகவே,--அத்துணைச் சொற்பமான சார்ஜ் வாங்கப்பட்டதாகவும் கூறி வியாபாரியை அனுப்பிவிட்டார். அன்று மாலையில் வியாபாரியின் விளம்பரப் பத்திரிகையில் ஒன்றை எடுத்து, அன்றையப் பத்திரிகைக்குள் வைத்து வியாபாரிக்கு அனுப்பிவைத்தார். மற்ற 13999—விளம்பரப் பத்திரிகைகளையும் அது கட்டியிருந்த கட்டை அவிழ்க்காதபடிக்கு அப்படியே ஒரு சக்கரைக் கடைக்கு அனுப்பி விற்றுப் பணமாக்கிவிட்டார். அந்தப் பணம் மானேஜரின் வயிற்றுக்குள் போவதாகும். ஆபீஸ் கணக்கில் அது சேராது. பிரபலப்

பத்திரிகைகளில் விளம்பர நோட்டீஸுகளை வைத்தனுப்ப முயல்வோர்களுக்கு இது ஒரு படிப்பினையாகும். ஆனல் மானேஜா கூறியவாறு எல்லா ஆபீஸ்களிலுமன்று.

கிருஷ்ணமூர்த்திப்பிரபு மறுபடியும் "லக்ஷ்மீகாந்தத்தின் விக்ரயபலத்தை" வாசித்துக்கொண்டிருந்தார். அச்சமயம் முன் சொன்ன கிரந்த கர்த்தா அங்கு வந்தார். அவரை விசேஷமாக அபிமானித்து அவரது நூல் மிக்க சிலாக்கியமாய்—அழகும், பெருமையும் எளிமையும் ஒருங்கே வாய்ந்த நடைகொண்டதாய் இருப்பதாகப் பெரிதும் பாராட்டிப் பேசினர். கிரந்தகர்த்தா தன் விஷயத்தில் மானேஜர் நடந்துகொண்ட ஒழுங்கினத்தைப்பற்றிக் கூறினர். உடனே மானேஜர் தருவிக்கப்பட்டார். "ஏன் இப்படிக் கிரமத்தவருக நடந்தீர்; பதினலாயிரம் பிரதிகளுக்குப் பதிலாக இருபதினயிரமென்று கூறி, அதற்கான காகிதமும் அச்சுச் சார்ஜும் மோசமாக ஏன் பெற்றீர் என்று பத்திராதிபர் கேட்க; அதற்கு மானேஜர்—"அது ஆபீஸ் வழக்கம்—எல்லா பத்திரிகை ஆபீஸ்களிலும் இப்படித்தான்" என்ருர். அதற்குள் மேலே பிரஸ்தாபித்த வியாபாரியும் வந்தார். மானேஜர் தமக்கு விதித்த சார்ஜைச்சொன்னர். சாதாரண சார்ஜில் பாதி விதிக்கும்படி நான் குறிப்பிட்டுக் கடிதம் தந்திருக்க இப்படி ஏன் செய்தீர் என்று மானேஜரைப் பத்திராதிபர் உசாவினர். மானேஜர் பதில் சொல்வதற்குள் வியாபாரி, ஐயா எனக்கு மட்டும் ஒரு பத்திரிகையில் எனது விளம்பரத்தை வைத்தனுப்பி, அதனல் எல்லாப் பத்திரிகைகளிலும் நோட்டீஸ்கள் வைத்தனுப்பியதாக நான் நம்பிக்கொள்ளட்டுமென்று செய்துவிட்டு, என்னுடைய நோட்டீஸ்கள் அவ்வளவையும் நான் கட்டிவைத்த கட்டை அவிழ்க்காமலே அப்படியே சக்கரைக் கடை யொன்றில் மானேஜர் விற்றுவிடச் செய்துவிட்டார். அதே கடைக்கு நான் அகஸ்மீகமாகப் போனதில் அங்கு எனது நோட்டீஸ்களின் கட்டுகளைக் கண்டு விவரமறிந்து வயிறெரிந்தேன்" என்ருர். மானேஜர் விசாரிக்கப்பட, அவர் "அது ஆபீஸ்வழக்கம்—எல்லா பத்திரிகை ஆபீஸ்களிலும் இப்படித்தான்"—என்

ளூர். அச்சமயம் கிரந்தகர்த்தா—' ஒரு வாரப்பத்திரிகை—மாதப் பத்திரிகையின் ஆபீஸுக்கு அதன் சந்தாதார் ஒருவர் சென்றால் எவ்வளவோ ஆவலாக விசாரிக்கிறார்கள். தினசரிப் பத்திரிகையின் ஆபீஸுக்குள் அப்பத்திரிகையின் சந்தாதார் ஒருவர் சென்றால்—அவர்களை ஏனென்றுகூடக் கேட்பாரைக் காணேம். சந்தாதார்களால் தான் பத்திரிகை நடைபெறுகிறதென்பதை தினசரிப் பத்திராதிபர்களும் அதன் மானேஜர்களும் மறந்தேபோகிறார்கள். நான் "ஆநந்தா" வின் சந்தாதாரனென்று கூறியும் மானேஜர் எனக்கு ஒரு நாற்காலிகூடத் தரவில்லை. என்னை நிற்க வைத்தே பேச்சுகள் வாங்கினார்"—என்றார். கிருஷ்ணமூர்த்திப் பிரபு கிரந்தகர்த்தாவை அவ்விதம் நடத்தியது உண்மையா என்று மானேஜரை வினவ, அதற்கு அவர்—"அது ஆபீஸ் வழக்கம்—எல்லா பத்திரிகை ஆபீஸ்களிலும் இப்படித்தான்"—என்றார்.

மானேஜர் பலமாகக் கண்டிக்கப்பட்டார். ஒரு வாரத்தில் வேலையைவிட்டு நீங்கும்படியும் உத்திரவாயிற்று. அன்று பிரசுரமான "ஆநந்தா" பத்திரிகையில் "புஸ்தகவரவு" என்ற தலைப்பின் கீழ் "யதார்த்த இந்தியா" என்ற ஒரு ஆங்கில புஸ்தகத்திற்கு வெகு சிலாக்கியமாக அபிப்பிராயம் எழுதப்பட்டிருந்தது. அதைப் பற்றி உப பத்திராதிபர் விசாரிக்கப்பட்டார். "சென்னப் பட்டணத்தி லுள்ளவர்களெல்லாம் "ரேக்ளா" வண்டியில்தான் சவாரி செய்கிறார்களென்றும், இந்தியாவில் பஞ்சமே யில்லையென்றும், இந்தியர்கள் ரத்தின வைடூரியங்களிலும் பொன்னிலும் கைபுழங்கி நிற்கும் மகா ஐசுவரிய ஸம்பன்னர்களென்பதற்கு—பரத நாட்டியமாடிய புன்னகை பூத்த பாவையர் தரித்திருந்த ஆடையாபரணாலங்காரங்களே போதிய சாக்ஷிய மாகுமென்றும்—கண்டபடி உளறியிருக்கிற இப்பயனற்ற "யதார்த்த இந்தியா" என்ற புஸ்தகத்துக்கு என் அவ்வளவு சிலாக்யமாக—விரிவான அபிப்பிராயத்தைக்காட்டிப் பத்திரிகையில் ஆதரித்து எழுதினீர்?" என்று கிருஷ்ணமூர்த்திப்பிரபு வினவினார். அதற்குத் தலைமை உபபத்திராதிபர் அந்தப் புஸ்தகத்திற்கு மூன்றாவது உபபத்திராதி

பர் அபிப்பிராயம் எழுதினுரென்ருர். உடனே அவர் அழைக்கப் பட்டார். அவரோ—“சிலாக்கியப்படுத்தி எழுதும்படி மானேஜரின் உத்திரவு” என்ருர். உடனே மானேஜர் கூப்பிடப்பட, அவர்வந்து—“அந்நூல் இந்தியா முழுமையும் சுற்றிப்பார்த்த ஒரு ஐரோப்பியகனவானுல் வரையப்பட்டதுடன், தமக்கு அவர் நிரம்பவும் வேண்டியவராகவும் இருந்ததால் அப்படி உத்திரவிட்டேன்” என்ருர். தலைமை உபபத்திராதிபரிடம் மற்ருெரு நாவலைக் காண்பித்து—“இதற்கு என் நான்குவரியில் அபிப்பிராயம் எழுதித் தீர்த்துவிட்டீர்?” என்று கேட்க, “மானேஜரின் உத்திரவு அப்படி” என்ருர். தக்ஷணமே மானேஜர் “அப்புஸ்தகம் எழுதியவன் வெகு சிறு பையன்; அந்த நாவலைத் தபால்மூலமாக அனுப்பியிருந்தாலும் ஒருகௌரவமாவது அவனிடம் வைக்கலாம்; நேரிலேயே கொண்டு வந்து தந்தான்; மிகவும் தரித்திரன்; அந்த ஏழை மானிடப்புழுவைப்பற்றிப் பத்திரிகையில் சிலாக்கியப்படுத்துவானேன் என்று என் மனதிற்பட்டது”—என்ருர்.

கிருஷ்ணமூர்த்திப் பிரபு தமது கோபத்தை முற்றிலும் வெளியிற் கொட்டினுர். ஆபீஸ் முழுமையும் கிடுகிடென நடுங்கியது. மானேஜர் மெதுவாக நழுவிவிட்டார். நேரில் மானேஜரை அவரது அறையில் கண்டிப்பதற்காக அவசரமாகச் சென்ற கிருஷ்ணமூர்த்திப்பிரபு ஒரு யந்திரத்தில் தமது விரல் அகப்பட்டுக்கொள்ள அவருக்குப் பலத்த காயமுண்டாயிற்று. அப்பொழுதே மானேஜர் ஆபீஸினின்றும் அகற்றப்பட்டார். தமது விஸ்வாஸ ஊழியனை “நோயல்” என்ற காப்பிரியை மறுதினம் காலையிற் புறப்படும் கப்பலுக்குப் பிரயாணப்படும்படி செய்து, தமது கைப்பட எழுதிய கடிதத்துடன் நெட்டாலுக்கு லக்ஷ்மீகாந்தத்தினிடம் சென்று அப்பெண்மணியை அழைத்துவருமாறு உத்திரவிட்டார். “பத்திராதிபரின் ஆபீஸ் நேரம்” முடிவுபெற்றது. வெளியில் மோட்டாரும் தயாராக நின்றது. அன்று பிரசுரமான “ஆநந்தா” பத்திரிகையில் பத்து பிரதிகள் மோட்டாரில் வைக்கப்பட்டன.

பத்திராதிபர் ஆரோகணித்ததும் மோட்டார் சில நிமிஷங்களுக்குள் அவரது இல்லம் போய்ச் சேர்ந்தது. சாவதானமாக மறுபடியும் லக்ஷ்மீகாந்தத்தின் கடிதத்தைக் கவனிக்கலானார். அதன் தமிழ் மொழிபெயர்ப்பு பின் வருமாறு:—

லக்ஷ்மீகாந்தத்தின் விக்ஞாபனம்

என் கதையை நானே சொல்லத் துணிகின்றேன். தெய்வமே கதியென்று தெய்வத்தை நம்பின பிராணியாயிருக்கின்றேன். வாய் விட்டலறினால்தான் இந்த எனது துயரம் சற்றேனும் தணியக்கூடும். திக்குங் காண்கிலேன்! தப்புந் திசையுங் காண்கிலேன்! தேடி என்னை இங்கு யார் நாடப் போகின்றார்? என் தாய்நாட்டின் தவப்பேயர் ஆணை; யான் பாரத பூமியிலே பிறந்த பாவையன்றோ? இன்றைக்கும் நான் கற்பு லக்ஷண உத்தமியே. இனியும் அப்படியே! ஹா என்னருமை நாதா! இந்த ஜென்மத்தில் இவ்வளவு தானா எனக்குப் பிராப்தம்? சின்னஞ் சிறு வயதினில் உம்மை நான் மணந்து, ஒருசாலையில் கல்வி பயின்று உள்ளம் களித்திருந்தேனே அந்நாள்! சென்று போன அந்த நாட்கள் இனித் திரும்பாவோ! நான் விதவையு மன்று! சுமங்கலியு மன்று; இவ்விரு நிலைகளில் எதனைத் தழுவுவதோ—அது தெரியப்பெறாத தூரமான பூமியில் என் காலம் கழிகின்றது பெண்ணென நான் பிறந்து, பிரபஞ்ச உல்லாஸ வியாபாரம் என்னும் ஆட்டத்திலே சிக்கி, ஆசைக் கயிற்றில் ஆடும் பம்பரமாக அல்லற்பட்டு நின்றழுத கண்ணீர் சொல்லத்தரமோ! ஐயோ நாதா! இது ஆர் இட்ட சாபனையோ! அடியாளின் தீவினையோ தெரிகிலேன். காதலர் பிரிந்திருக்கும்போது, அவர்களை ஒருவருக்கொருவர் ஓலை எழுதலாகாதென்று தடுத்தால், அவர்கள் பிறருக்குத் தெரியாதபடி, ஆயிரம் ஆச்சரிய வழிகள் கண்டுபிடித்துப் பேசிக்கொள்ளுகிறார்கள். பறவைகளின் பாட்டையும், மலர்

களின் மணத்தையும், குழந்தைகளின் சிரிப்பையும், *ஞாயிற்றின் ஒளியையும், காற்றின் உயிர்ப்பையும், † வானத்து மீன்களின் ‡ கதிர்களையும் காதலர் தூது விடுகிறார்கள். ஏன் கூடாது? தெய்வத்தின் படைப்பு முழுதும் காதலுக்குத் தொண்டு செய்யும் பொருட்டாகவே அமைந்திருக்கிறது. உலக முழுதையும் தூது போகச் செய்கிற திறமை காதலுக்குண்டு. உலக உண்மை இங்ஙனமாக, நமது காதல் ஏன் இவ்வண்ணம் இறந்துபட்டதோ— விளங்க உரைப்பாரிங்கு இல்லை. புருஷரைக் காட்டிலும் பதின்மடங்கு தமது பர்த்தாவின் பிரிவாற்றாமைத் துன்பத்தைப் பெண் பாலார் நன்கு உணருகின்றார்கள். இந்த வகையில் கையிற் கிடைத்தும் களிக்க இடமில்லாமற்போன என்னையொத்த துரதிர்ஷ்டசாலிகளின் துக்கம் எத்தகைத்தோ? அந்தோ! வீணே உள்ளுக்குள்ளாயிருந்து என்னைப் பக்ஷிக்கும்படி மனக்கோட்டைகளுக்கு இடங்கொடுத்து, என் மனோவமைதியை அநியாயமாய்ப் போக்கடித்துக் கெட்டேனே—என்று இப்பொழுது எனக்குத் தெரிகின்றது. அச்சோ!

என் பிறப்பு வளர்ப்புக்

கண்ணாவிகளை என்னென்பேன்! பாழும் மாற்றாந் தாய்களால் உலகத்து மக்கள் படும் வாதனையை ஹா பகவானே! நீர் எப்போது அகற்றுவீர்! கும்பகோணத்திலே உப்புக்காரத் தெருவினிலே உயர்நலம் அமைந்த கௌரவ குடும்பமொன்றில் பேதை நான் பிறந்தேன். எனது இளமையிற்றானே விவாகமும் நிகழ்ந் தேறினது. அப்பொழுது பருவம் எனக்கு எட்டுக்கு மேலில்லை. என்னை யன்றி வேறு ஆண் குழந்தை களின்மையால் எனது தந்தை மற்றொரு விவாகந் துணிய முயற்சி நாடுவதானார். எனது மாதாவுக்கு இது சம்மதமில்லை. சகல உடமைகளையும் உரிமைகளையும் தனது ஆதீனமெனக் கருதி

* ஞாயிறு=சூரியன் † வானத்து மீன்கள்=நக்ஷத்திரங்கள்
‡ கதிர்=பிரகாஸம்.

யிருந்த எனது தாய் அவ்வனைத்தையும் புதிதாக வருபவளுக்கு ஒப்புவித்து உயிரோடு தன் பிராணநாதிகளையும் அவளுக்கே கொடுத்துவிட்டுத் தான் தனிப் பாயில் உறங்க விதி நேருவதானால் அது ஸகிக்கப்போமோ! அதுவே எனது அன்னைக்குத் தீராத்துயர மாகி தேகம் மெலிந்து துரும்பானார். நாங்கள் இருந்த இல்லத் திற்கு எதிர் வீட்டிலிருப்பவர் என் பிதாவுக்கு நெருங்கிய நண்பர். பாவம்! அவருக்கு சந்தானபாக்கியத்திற்குப் பிராப்தமில்லை. அவ ரது மனைவி வெகு உத்தமி. குழந்தைப் பேறுக்காகத் தனது கணவனை மறுவிவாகம் செய்துகொள்ளும்படி,-மாமியார் முதலா னோரால் தூண்டப்பட்டபடியே,—தனது பர்த்தாவைப் பெரிதும் வற்புறுத்தினாள். அவரோ "புத்திரபாக்கியம் வேண்டுமானால்— நீயே இன்னொரு ஆடவனை மணந்து பெற்றுக்கொள்"—எனக் கூறிவிட்டார். பிறகு பதில் பேச வாய் ஏது? இக்கதையை எனது பிதாவுக்கு அடிக்கடி அவரது நண்பர் எடுத்தோதுவார். வேறு விவாகப் பிரயத்தனம் வேண்டாமெனத் தடுத்தும் வந்தார். ஆயினுமென்ன? தந்தையின் வைராக்கியம் வரவர முற்றிப்போய் கும்பகோணத்திற்கு அருகேயுள்ள சுவாமிமலையில் ஒரு பெண் ணைப் பார்த்து,

மறுவிவாக நிச்சயார்த்தம்

செய்துவர சில சுமங்கலிகளுடன் என்னையும் அனுப்பினார். மணப்பெண்ணை நாங்கள் போய்ப் பார்த்தோம். தென்னமரம் போல் நன்றாக வளர்ந்து லக்ஷணமாயும் தோன்றினாள். ஆனால் என் தாயின் காலில் ஒட்டிய அழகு கூடப் பெறாள். அதிகமான ஆபர ணாதிகள் அப்போது என் மீது இருந்தன. மணப்பெண் என்னை வீட்டின் கடைசியிலுள்ள தோட்டத்திற்கு அழைத்துச் சென்று, "உன் மேலிருக்கும் இவ்வளவு நகைகளும் உன் தகப்பனுரு டையதுதானே" எனக் கேட்டாள். எனக்கு நெஞ்சு திடுக் கிட்டது. விவாகமான பின்பு இந்த நகைக ளனைத்தையும் கைப்பற்றிக் கொண்டு விடலாமென்று இப்பொழுதே வஞ்ச னேக்திகள் செய்கின்றாளல்லவா என்று எண்ணிக்கொண்

டேன். பிறகு மணப்பெண்ணைப் பார்த்து "இந்த ஆபா ணங்கள் யாவும் எனது பாட்டனாருக்குச் சொந்தம்; அவர் தமது குமாரத்தியாகிய எனது தாயாருக்குச் சீதனமாகக் கொடுத்தது. இன்றைக்கும் நாளைக்கும் எனது தகப்பனார் சாப்பிடுகிற சாப்பாடு, உடுத்திக்கொண்டிருக்கும் வஸ்திரம், எல்லாம் என்னுடைய பாட்டனாருடையதுதான். எனது தகப்பனாருக்குப் பூர்வ சொத்துக்கள் திரிச்சினாப்பள்ளியில் உண்டென்று கேள்வியே தவிர, இப்போது ஒரு பைசா கூட அவருக்குச் சொந்தமாக ஒன்றுமில்லை" என்றேன். அதற்கு மணப்பெண்—"ஒரு சிறு நண்டுக்கு எவ்வளவு வார்த்தைத் துணிவு"—என்று சிடுசிடுத்துவிட்டு திடீரென்று எழுந்து சென்றுவிட்டாள். பிறகு நிச்சயார்த்தம் பேச ஆரம்பிக்க, மணப்பெண்ணின் பெற்றோர்கள்—"அம்மா எங்கள் குமார்த்திக்குக் கொஞ்சம் வாய் அதிகம்தான்; பிறகு எங்கள் மீது மனஸ்தாபப் பட்டுக்கொள்ளக்கூடாது" என்றனர். அதன் பின்னர் ஸகலமும் பேசிக்கொண்டு கும்பகோணம் திரும்பி தகப்பனாருக்கு இவையனைத்துந் தெரிவித்தோம். அவர்—"இருக்கிறவர்கள் சரியாக இருந்தால் அதிகமான வாய்கூட மௌனப்பட்டுப் போய்விடும்"—என்றார். விவாகம் நடந்தேறுதற்கு முன்னதாகவே இவ்வாறு என் பிதா நவின்றதானது எனது மாதாவுக்குத் தீராச் சஞ்சலமாகவிருந்தது. மணப்பெண் என்னை அழைத்து நகைகளைக் கேட்ட விஷயத்தையும் என் அன்னைக்குக் கூறிவிட்டேனாதலின்—அது எரிகிற நெருப்பில் நெய்விட்டது போலாயிற்று. விவாகத்திற்குத் தான் இருப்பதில்லையென்று சொல்லிவிட்டு,—என்னை யனுப்ப எனது தந்தை மனமொப்பாமையால்,—என் பர்த்தாவை உடன் அழைத்துக்கொண்டு எனது மாதா காசி யாத்திரைக்குச் சென்றுவிட்டார். நான் நல்ல நித்திரையி லிருந்தபோது இவ்வாறு பிரயாணப்பட்டுப் போய்விட்டனர். அதிக விரிவு எதற்காக? கடைசியில் ஸ்வாமிமலையில் விவாகமும் நடந்தேறியது. எனது தந்தையின் இரண்டாவது மனைவியின் பெயர் ருக்மணி. இது நாய்க்கு "ரோஜா" என்று பெயர் வைத்த மாதிரிதான்! மணப்பெண்ணை